# சித்ரா பௌர்ணமி





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# சித்ரா பௌர்ணமி

## பொருளடக்கம்


1. எம் யதார்த்த நிலை --- 2
2. கேள்வியும் பதிலும் --- 7
3. அவன் அனுப்பினால் வரும் - ஓர் விளக்கம் --- 35
4. இறை (குரு) நாமாக்கள் - ஓர் விளக்கம் --- 44
5. மண் (பரம்), பொன் (ஈசன்), ஆவரணம் (ஜீவன்) - ஓர் விளக்கம் --- 51
6. அத்வைதத்தின் ரகஸ்யம் --- 56
7. மண்ணும் பொன்னும் --- 65
8. மாயா மனம் --- 72


எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு. ஓம் தர்மம் செய். (ஸத்தியவாக்கை)

நாவை அடக்கு. நன்மையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!"

# "ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"

# "நம்பினோர் கெடுவதில்லை!"

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்,"

# "ஓம்"

# "அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம், "அகமே எல்லாம்"!

# "ஜெகம்பரமும், ஜீவர்களும்," "சிறிதும் இல்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்," யத்பாவம் தத்பவதி!



# எம் யதார்த்தநிலை!

காலாதீத "அநுபவங்களே" இருந்த "யாம்" விளையாடுவதற்காக, "மாயாவை" பற்றினோம். "திரிகர்த்தாக்கள்" என ஆனோம்! அனைத்து ஜகத் ஜீவ கோடிகள், தாவர வர்க்கங்களை, உண்டு பண்ணி, மாயாவின் "மனதில் அகப்பட்டதைப்போல்" ஓர் பாவனையை, உண்டுபண்ணி, அந்தமனமய பாவனையால், அனைத்திற்கும், ஓர் உருவத்தை உண்டுபண்ணி, அவைகளின் இயக்கத்திற்கு, ஏற்றபடி, ஒவ்வொன்றிற்கும், பெயரிட்டு "நாமரூபம்" இட்டு அவைகளை, "நான் எனது" என சொந்தம் கொண்டாடி, சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் பாசமும், பாசத்தால் புண்ணிய பாப "வினை"களும் எமக்கு நாமே சேகரித்து கொண்டு, "காரசாரமாக" விளையாடினோம்! இவ் விளையாட்டில் "போதும்" என "நிறைவு" பெற்றோம்!



உ

③

யாம் "அது" வாக இருக்கும் போது, செயலற்ற "ஒன்றாக" இருந்தோம். "அவனாகிய" ஸ்ரீ பகவான் என ஆகும் போது, செயலுற்ற திரி "கர்த்தாக்களாக" ஆனோம்! "ஜீவனாகிய" மனம் படைத்த மனிதன் என ஆகும் போது, "விளையாட்டின் வேகத்தால்", "நான், எனதை" பற்றிக் கொண்டு "பந்தப்பட்டவன்"ப் போல் நடிக்கிறோம். இந்த நான் எனது என்பது எம்மை எப்படி, பற்றிச் சூழ்ந்து, கொண்டது என்றால்?

"நான்:- என்றால், அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம்,

"எனது:- மானவமானம், கோப, சாபம், வேதனை, வெட்கம், இவைகளுடன் "உடைமையும் உரிமையும்" கொண்டாடி, கணவன், மனைவி, குழந்தை, அம்மா, அப்பா, உறவு, சுற்றம், நட்பு, குடும்பம், தொழில், பணம் என அனைத்தையும், எம்மனதால் பார்த்து விகாரம் அடைந்து, விவகரித்து (ப்ரச்சனைகளை உண்டுபண்ணி)



(4)

"மது" உண்டவனைப் போல், மயக்க "போதையால்" தடுமாறுகி றவனைப் போல் "மனைவி"யால் "மயங்கியவனை"ப் போல வும்; "கனவுலகை" எல்லாம் பொருளு புகழையும் "ஏற்றுக்" கொண்டவனைப் போலவும் மனைவியாய் போகம் கொடுக்கிறவளைப் போலும் "குழந்தைகளாய்", பாசத்தை கொட்டு கிறதைப் போலும்; "தொழில்.பணம்" என தெரு "நாய்" போலும். "பேய்" போலும். பொன், பொருள், பதவி, பட்டம், புகழ், இவைகளை "நாடி" "தேடி" "ஓடி", ஆடி, ஆடி, ஆடி, ஆடி, ஆடி, "அலைக்கழிவதைப்" போலும். "திரும்பட" நடித்துக் கொண்டிருந்தோம். இப்போது எம் நடிப்பை முடித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், எம் நடிப்பை நடிப்பாக உணராமல் இங்கு "மனம்" பிடைக்க மாந்தர் "எம்" மாற்றத்தை, உணராமல், "ஏமாந்து" போயிருக்கிறார்கள். உலகத்திற்காக, யாம் மரமும் இல்லை! வாழ்வும் இல்லை!!

உ

(5)



"எமக்காகவே" வந்தோம்; "வாழ்க்கை" என சொல்லிக் கொண்டு, வாழ்வதைப்போல், ஓர் "பாவனையை" மட்டும் காட்டிக் கொண்டு, "சுட்ட சட்டி, சட்டுவம்," (மண் சட்டியும், அதில் போடும் கரண்டியும்) "கறியின் சுவையை, அறியுமோ?" (மேலே கூறிய, அவ்விரண்டும், குழம்பின் சுவையை அறிய முடியுமா?) (முடியாது) என்ற நிலையிலும்; "சுட்ட மண்ணும் பச்சை மண்ணும்" ஒன்று சேர முடியுமா? (முடியாது) என்ற நிலையிலும்; "பேசவும் பிறரும் இங்கே!!" ஆனால் எம் "ஆசையும் நேசமும் அங்கே!" என்ற நிலையில், சஞ்சாரம் செய்வதால், எம்மை யாமே அறிவோம். உணர்வோம்! எம்மை, எவரும் அறியார்! உணரார்!! உரை முடியாது!

உ

(6)



அது போல,
"நீங்கள் அனைவரும்" உலக பாவனையை
மட்டும், காட்டுங்கள். உங்களாலும்
அப்பாவனையில் மயங்கி விடாதீர்!
"முடியும்!" மீண்டும் சுருக்கு, நந்தக் கற்றுக்
கொடுக்கவும் வேண்டுமோ? பிரமாணமாகச் சொல்
கிறேன். இது சத்தியமே! எப்படி என்றால்???
"ஸ்வயஞான அனுபவ
கருத்துக்கள்!" நூலின்.
"ஏக்குழந்தை" முழுமையாக நம்பி,
சிரத்தையும், வைராக்கியமும் கொண்டு, வாய்
ஞானம் இல்லாமல், அனுபவஞானமாக "உள்
ஆழ்ந்து" சுவைத்து, அதன் மயமாகிறதோ,
"அக்குழந்தை(யே), எம் போல்
இவ்வுலகமாகிய, நாடகமேடையில், நடிக்கவும் முடியும்.
"ஜீவன் முக்தி"யும் அங்கு? பெற்று விட்டீர்கள்
அனைவரும்
என, பிரமாணமாக சொல்கிறேன். நம்பும் குழந்தைகள்
எம் குழந்தைகளே! அவர்கள் யாமே! யாமே அவர்கள்!! மற்றும்
அனைத்து குழந்தைகளும், எம் குழந்தைகள்தான்! ஆனால் அவர்கள்
இன்னமும், விளையாடும் குழந்தைகளே! — நன்றி பாபா.



ஓர் கேள்வி:– யுகயுக தர்மப்படி, ஓர் பொருளை ஒருவர் ஒருவருக்கு கொடுக்கும் போது, ஸ்ரீ பகவான் பொருளை! ஸ்ரீ பகவானுக்கே! ஸ்ரீ பகவான் கொடுக்கிறேன்! என சர்வார்ப்பண நிலையில் செய்யச் சொல்கிறீர்களே? இதில் ஓர் சந்தேகம் தோன்றுகிறது? அதாவது?

(1) ஸ்ரீ பகவானின் நாமரூபம், சூட்சுமமாகவும், நம் கற்பனையாகவும் இருப்பதால் "நம் கண்களால் காணும் தூல" வஸ்துக்களை, எப்படி ஸ்ரீ சூட்சும பகவானுக்கு, கொடுக்க முடியும்?

(2) நாம் கொடுப்பதோ, அவன் ஏற்பதோ, "கற்பனை" நிலையில்தானே செய்கிறோம். அங்கு நம்பிக்கை, எவ்விதம் வர முடியும்?

(3) ஓர் பொய்யான காரியத்திற்கு, ஓர் பொய்யான முக்கியத்துவம், கொடுப்பதாக தோன்றுகிறதே?

(4) "நான்/என்னால்/என்னுடையது"! என்பது, அத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததா?

இவைகளை, சற்று சுருக்கமாக, விளக்கினால் நலமாயிருக்குமே?

பதில்:– இவைகளுக்கு, பலகாலமாக, பல நிலைகளில், விளக்கம் கொடுத்திருக்கிறோம். ஆனாலும் பரவாயில்லை! "எறும்பு ஊர கல்லும் தேயும்!" என்பார்கள், அனுபவ பெரியோர். மற்றோர் நிலையில், "அடிமேல் அடித்தால் அம்மியும் நகரும்!" என்றும், ஓர் பழமொழி உண்டு. இந்த நிலையில் உன் மனம் பண்படுவதாக!



௮

(1) உன் கேள்வி:- ஸ்ரீ பகவானின் நாம ரூபம், நம் கற்பனையாக இருப்பதனாலும், நம் கண்களால், காணும் ஜட வஸ்துக்களை, எப்படி, சூட்சுமமாயிருக்கும் ஸ்ரீ பகவானுக்கு, எப்படி கொடுக்க முடியும்?

என் பதில்:- "நீ காணும், நாம ரூப ஜகத், வஸ்துக்கள் அனைத்தும், "தூலமே"! அவை "மண்ணே" ஆனால், ஸ்ரீ பகவான்! நீ எந்த வடிவம், உன் "மனோமய கற்பனையினால்" கொடுக்கிறாயோ, அந்த வடிவம் தாங்கி, "பரசொரூபமே" பர கருணை நிலையில், அதுவே வருகிறது. என்பதை முதலில் உணர்வாயாக! காரணம்? பரசொரூபம் செயல்படாது! செயல்பட முடியாது! ஆகவே, அது உன் மனோமய, "கற்பனை" வடிவத்தைத் தாங்கி வருகிறது. இங்கு உன் "நம்பிக்கையே"! பிரதானம் ஆகிறது. நாம ரூப ஜகத் பொருள்கள் அனைத்தும், ஸ்ரீ பகவானுடையதாகவும், ஸ்ரீ பகவானின் இயக்கமாகவும் இருக்கிறது. இங்கு உன் மனோமய பாவனையால், அவ்வஸ்துக்களை, "நான், எனது" என, பாவனை செய்து, அவைகளை, புண்ணிய பாபம் என்னும், தோஷ குணங்களை, புகுத்தி விட்டாய். இந்த தோஷ



உ

(9)

குணங்களுடன், அவை அனுபவிக்கப் பட்டால், "புண்ணிய பாவம்" உன்னையே சேரும். அதனால், ஜனன மரணம் உண்டு!

மேலே சொன்ன, அப்பொருள்களை "எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையதே" என, சர்வார்ப்பணம் செய்யும் போது. மண்ணுவான பொருள், மண்ணுவான உன் தேகத்தையே சேரும். அம்மண்ணில், உன்மனமே மயமாவியான, "குணதோஷம்" சூக்ஷ்மமாக இருக்கிறது. அதை ஒழிக்க, ஸ்ரீ பகவானும், சூக்ஷ்மமாகவே இருக்கிறான். ஆகவே சூக்ஷ்மத்தை, சூக்ஷ்மம் ஒழிக்க முடியும். ஒழிந்தே ஆக வேண்டும். ஆகவே, "மண்ணில் தோஷம்" இல்லை! உன் "எண்ணத்தில்" தான், தோஷம் இருக்கிறது. ஆகவே உன் "கற்பனை" சொரூபமான, ஸ்ரீ பகவான்; உன் "கற்பனை" சொரூபமான, நாமரூப வஸ்துக்களின், "கற்பனை" சொரூபமான, குண தோஷங்களை, ஒழித்துக் கொள்கிறான், என பொருள் கொள்ள வேண்டும்.



(10)

உன் கேள்வி:

(1) நாம் கொடுப்பதோ, அவன் ஏற்பதோ, "கற்பனை" நிலையில் தானே செய்கிறோம்? அங்கு நம்பிக்கை, எவ்விதம் வர முடியும்?

(2) ஓர் பொய்யான காரியத்திற்கு, ஓர் பொய்யான முக்கியத்வம், கொடுப்பதாகத் தோன்றுகிறதே, இது சரிதானா?

எம் பதில்:– "நாமரூப ஜகத்" பொருள்களும், அவைகளின் "விருப்பும்" / "வெறுப்பும்" / "மனமய கற்பனையே"!

இங்கு "உண்டு" என்றால், "உண்டு"! இங்கு "இல்லை" என்றால் "இல்லை" தான்! இங்கு உன் "நம்பிக்கை" தான் நாமரூப ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள் எனமுற்றும், உறுதி கொள். உண்மையாகவே, அனைத்தும் "பொய்" என்ற "திட உணர்வு" உனக்கு இருக்குமாயின். அதை அப்படியே, ஏற்றுக்கொள். அங்கு உன் "அறிவு" ஸ்திரமாக, இருக்கிறது என உணர்!



(11)

அங்கு நீ எந்த **முயற்சியும்!**
எந்த **பயிற்சியும்!** எந்த
**சாதனையும்** பண்ண தேவை
யில்லை. இதுவே ப்ரமாண, உண்மையாகும்!
நாம ரூப, ஜகத், ஜீவர்கள், பொருள்கள்,
ஈஸ்வராதிகள், **ஸத்யமாய்**
இருப்பதைப்போலும், இயங்குவதைப்போலும்,
இன்பதுன்பத்தால் **மனம்பாதிப்பு**
(சபலம், சலனம், சந்தேகம், கலக்கபயம் அடை
வதைப்போலும், உடல் உலக **உணர்ச்சி
கள்**) இருந்தால், அவஸ்யம், ஏதேனும் ஓர்
நாமரூப மூர்த்தி, ஸ்ரீ பகவானிடம், சர்வார்ப்பணம்,
செய்தே ஆகவேண்டும்! பொய்யான காரியத்திற்கு,
பொய்யான முக்கியத்துவம் கொடுக்க வில்லை. அங்கு
நாம ரூப, ஜகத், ஜீவ பொருள்கள், ஈஸ்வராதிகள்
என்ற **முள்ளாக** இருப்பதைப்போல்
இருந்து கொண்டு உன் இதயத்தை எண்ணத்தால் புண்படுத்துகிறது.
அது இல்லாத ஒன்றுதான். ஆனால் உனக்கு, இருப்பதைப்
போல், தோன்றுகிறதே. அதனால்தான் அந்த





இவ்வாறு "மூன்றை" இவ்வாறு ஸ்ரீபகவான் என்ற "மூன்றை" வைத்து எடுத்து விட்டு, அவ்விரு மூன்றையும், தூர எறிந்து விடலாமே! அதாவது, நாமரூப ஜகத்ஜீவ, ஈஸ்வர கற்பனையான "எண்ணத்தை" ஸ்ரீபகவானின் சர்வார்ப்பண கற்பனையான "எண்ணத்தால்" கெடுத்து விட்டு நாம் அதுவே! அதுவே நாம்! என அம்மா சுத்தமாக இருக்கலாமே!

(4) உன் கேள்வி:— நான்! என்றல்! என்னுடையது! என்பது அத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததா! என்பதில்:— "நான்! என்றல்! என்னுடையது"! என இம் மூன்றும், "கலிபுருஷனின்" சித்தாந்தமாகும். அதாவது, கலியுக தோஷ "பிரவர்த்திகள்" ஆகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். இந்த மூன்றுமே, "நான்! எனது" என்ற அஹங்கார, மமகாரத்தில் அடங்கும்.



உ (13)

இதை பெரும்பாலும், அஹங்காரம் என்றும், அபிமானம் என்றும், இவ் விரண்டையும் ஒருவத்தோடு சேர்த்தே, "பக்தியின்" நிலையில் "ஆத்ம ஞான அழுக்கு" என, நான்கு யுகங்களிலும், வாழ்ந்து காட்டிய, அனுபவ ஞானிகள் கூறுவர். இதை பிரித்து நோக்கும் போது, "நான்" என்பதே, என்றால், என்றும், அதுவே அஹங்கார, அதிகார, ஆதிக்க "வெறி" என்றும் சொல்வர்! "எனது" என்பதே உடைமை கொண்டாடுதலும், உரிமை பாராட்டுதலும், மானம், அவமானம், வெட்கம், சூடு, சுரணை, லஜ்ஜை என "அபிமானித்து", "விகாரத்தையும்", அதைவிட "விபகாரங்களையும்" பிரச்சனைகளையும் உண்டு பண்ணி, "ராகத்துவேஷாதி"களையும், அதாவது, விருப்பு வெறுப்பையும், உண்டு பண்ணி, பேதங்களை உணர்த்தி, "புண்ணிய யில் பாவங்கள்" பெருக்கி, ஜனன மரண, சுழற்சி சுழல வைக்கிறது என, ஸ்ரீமஹான்கள் தங்கள் அனுபவத்தில் கூறுவர்.





ஆகவே நான், எனதை! "நாமம்"

செய்வதே, உயர்ந்த "பக்தியோ"!

உணர்ந்த, "அத்வைத ஞா

னமோ"! தரவல்லது என்று, ஸ்ரீமஹான்களின் அனுபவம்

ஆகவே?

"ஆகும்!"

"நான்" "எனது" என்பதே, நாம ரூப

ஜகத் ஜீவர்களின், "புண்ணியபாப"

கர்மாக்களின், பிறப்பும் இறப்பும் ஆகும்!

"ஸ்வாமி நீயே" "ஸ்வாமி உனதே"

என்பதே, நாமரூப ஜகத் ஜீவஸ்வரூபங்களை "விட்ட"

நிலையில், "ஸ்ரீபகவத்" சொரூபத்தை "தொட்ட"

நிலையும் ஆகும். அந்த ஸ்ரீபகவத் சொரூபத்தையும்,

"நாம்" என ஆக்கிய நிலையில், நமக்கு அன்னியம்

எவையும், இலாத்தன்மையினால், "பரமாத்ம"

சொரூபமாகிய, ஸ்ரீபகவானையும், அறியாமையினால்,

"ஜீவாத்ம" சொரூபமான நம்மை, ஜீவகளை

களைந்த நிலையில் "நாம் நாமான"

தன்மையினால் "அதுவேநாம்" "நாமே

அது" என உணர்வுடன், சும்மாவே சுகமாக இருப்பாயாக!



உ

(15)

ஹே பாபாஜீ! தாங்கள் வாயிலாக, வந்த ஓர் "பிரம்மாண்டமான" கேள்வி! இதைக் கேட்டதும், இந்த ஏழைமேல், துவேஷமோ, குற்றமோ கொண்டு விடலாகாது என, பணிந்து உங்களிடம், மன்னிப்பு கேட்டுக் கொள்கிறது!

ஹே அன்பான குழந்தாய்! இந்த ஏழை வைத்தியம், எந்த குழந்தைகளிடமும், அப்படி நடந்திருக்கிறதா? ஒருவேளை, அப்படி நடந்திருந்தாலும், இந்த ஏழையை மன்னிக்கும்படி, உன்னிடம் வேண்டிக் கொள்கிறது! உன் அப்படி, ரகஸ்யார்த்தமான, கேள்வி என்ன?

என்ன பாபா இது! இப்படி பெரிய பெரிய, வார்த்தையை யெல்லாம், கொட்டுகிறீர்களே! இதுவே பெரிய சங்கடமாயிருக்கு!!!

சரியம்மா! சரியம்மா!! இனி அவ்வாறு பேச மாட்டோம். உன் கேள்வியை, தாமதம் செய்யாமல் கேட்பாயாக. இப்போது நீ கேட்கும் கேள்வியானது, எம் அனைத்து குழந்தைகளுக்கும், ஓர் "ஒளடதமாகவும்! தேன் மதுரமாகவும்" அமையுமென, தோன்றுகிறது!

"அது என்ன பாபா! ஒளடதம் என்றால் அது, கசப்பான மருந்து! தேன் என்றால் அது, தித்திப்பான சுவையான ஓர் உணவுப் பொருள். இவ்விரண்டும் இணையுமா? (தேனும் ஓர் சுகமான ஔஷதமே!)

ஆமாம் குழந்தாய்! கசப்பான மருந்தை இனிப்பான தேனில், குழைத்து கொடுப்பது தானே முறை?



உ

(16)

எங்கள் அருமையான பாபாஜி!
கசப்போ? இனிப்போ?? எதுக்குந்
தெரியாது. பலபல நேரம், உங்களுடனே
இருந்து, அனேக விஷயங்களை "
" உங்கள் கிருபையினால்
கேட்டு, எந்த விடையும், சுவைக்கிறது. இந்த
விடையும் சுவைக்கிறது. நாங்கள் "அருள்
கரம்" கொண்டு, இது காலபரியந்தம், வெளிவந்த,
"மடல்களையும்" நோக்கியிருக்கிறது.
அவைகளின் "ரகசியமான"
கேள்வியாகும் இப்போது இது கேட்கும், கேள்வியாகும்?

ஹேபாபா! நாங்கள் வாயிலாகவும், மடல்கள்
மூலமாகவும், தேவ தெய்வங்களிலும் (திரிமூர்த்தி
களிலும்) அதிகமான ஓர் "மஹா
புருஷனை"/ ஓர் "திரிகாலஞானி
யை"/ (தரிசிக்கச் செய்தீர்கள் ↑) இதன் அறிவுக்கண் கொண்டு தரிசிக்கிறது.
அவன் "பிரம்மாவின்" சிருஷ்டிக்கும்,
அப்பாற்பட்டவன், எனவும் இது அறிகிறது.
இந்த நான்கு யுகங்களிலும் "தம்மைத்தாமே,"
"ஆறுமுறை" தோற்றுவித்திருக்கிறீர்கள் எனவும்,
இதன் அறிவால் உணர்கிறது.



(17)

"ஏழாவது" முறையாக, எங்களுக்காக, தோன்றியிருப்பவனையும், நாங்கள் திருமையால், அறிய முடிகிறது.

அடுத்து, இக்கலியுகம், முடிவதற்குள், "ஒன்பதாக" இப்பூமண்டலத்தில், ரஷ்யா கண்டத்தில், "மாஸ்கோ" என்னும் ஓர் இடத்தில், அவதாரம் செய்யப் போவதாகவும், "அம்மஹா புருஷன் பாயிலாகவும்" அறிகிறது.

இந்த அபல ஏழை!

இதில் இந்த ஏழையின் கேள்வி?

1. தன் ஜனனத்தையே, அழிக்க முடியாத ஒருவன் (திரும்ப திரும்ப வரும் ஒருவன்), மற்றும், அவனையே நம்பும் ஜீவர்கள் (பக்குவ ஆன்மாக்கள்) எப்படி ஜீவன் முக்தியென்ற, பிறவா நிலையைக் கொடுக்க முடியும்?

2. நாங்கள் படித்தும், கேட்டும் உணர்ந்த, அனேக ஸ்ரீமஹான்களுடைய, அவதாரத்திற்கும், ஸ்ரீபகவான், தன்னைத்தானே தோற்றுவித்துக் கொள்ளும், அவதாரத்திற்கும், இந்த மஹா புருஷனை, திட்ஞானியின், அவதாரத்திற்கும், உள்ள வித்தியாசம் என்ன? அவர்களுடைய காரணகாரியம் என்ன? இவனுடைய காரணகாரியம் என்ன? (நோக்கம் என்ன?)



உ

3 (18)

ஸ்ரீபகவானின் அவதார காலங்களிலும், ஸ்ரீ மஹான்களின் அவதார காலங்களிலும், "சில, சில இடங்களில்" நமக்கென சில "பக்குவ ஆன்மாக்களையே" சில "மஹாத்மாக்களையோ"!!! இவனை, அழைத்துச் செல்வர் என, படித்திருக்கிறது. கேட்டும் இருக்கிறது. அந்த நிலையில் இந்த மஹா புருஷனும், "முன்போ. இப்போதோ" அவனிடம் உள்ள "மெய்யன்பர்களையோ / மெய் அன்பனையோ" நமக்கு "உபகரணமாக" (உபகாரியாக) இட்டுச் செல்வதுண்டா? இல்லை தான் தானைத், "தனித்தே" செல்வானா?

ஓம் கருணையான! கனிவான! பாபா ஜீ!
இது பற்றி, அனேக இடங்களில், அன்பர்கள் மத்தியில் பேசி விளக்கம் பெற முயலுவோம். ஆனால் அங்கு, எங்கள் அனைவருக்கும், "குழப்பம் தான்" உண்டாகுமே தவிர, தெளிவு பிறக்கவில்லை. இது பற்றி தாங்களிடமே, கேட்போம் என, அனைவரும் முடிவு செய்வோம்.

உ

(19)



தைரியம் வரவில்லை.
இக்கேள்வியை யார் கேட்பது?
எப்படி கேட்க ஆரம்பிப்பது
என ஓர், கலக்க பயம் உண்டானதே?
ஓர் பழமொழியுண்டு. பூனையின்
கழுத்தில், யார் மணியை கட்டுவது?
என எலிகள் கூடி, ஆராய்ந்தது போல்,
எங்கள் ஆராய்ச்சி, பலன் தரவில்லை! இன்று
"சித்திரை" வருடம் பிறந்திருக்கிறது.
இன்று, இது கேட்டுவிடுகிறது என அன்பர்களிடம்,
விடை பெற்று நாங்கள் முன், இந்த மூன்று
கேள்விகளுடன், நிற்கிறது! "ஓர் ஏழை
பிச்சை" ஏந்தி நிற்கிறது பாத்திரம்! இனி நாங்கள்
பொறுப்பு! அது இந்த ஏழையின் பாக்கியம்!! அது எங்கள் அன்பரின் பாக்கியம்
ஏழை வைத்தியத்தின் பதில் :- ஓம் அன்பும்,
அறிவும், பணிவும், கனிவும், "சாதுர்யமும்"
நிறைந்த குழந்தாய்! நல்ல பயனுள்ள கேள்வியையே
கேட்டாய். இக்கேள்வி "அனைவருக்கும்"
பயன்படும். மேலும் மிக்காவ, "அன்பர்கள்"
அனைவருக்கும், பயன் படும்! கூர்ந்து நோக்குக!
ஓம் ஆத்மானந்தக் குழந்தாய்! முதலில் நலம்
பெற, வாழ்த்துகிறோம். நல்லார் "ஒருவர்"
உண்டு! ஆகவே, "எல்லோர்க்கும்"
"கருணைமழை பொழிகிறது"!!!



உ ௨௦

1 தன் ஜனனத்தையே, அழிக்க
முடியாத ஒருவன், மற்றும், அவனையே
நம்பும், ஜீவர்களை (பக்குவ ஆன்மாக்களை)
எப்படி, ஜீவன் முக்தி யென்ற, பிறவா
நிலையை, கொடுக்க முடியும்?

ஓர் ஏழையின் பதில்:— நீ குறிப்பிடும், அந்த
திடஞானி, "பிரம்மாவின்" சிருஷ்டி
க்கும், அப்பாற்பட்டவனாகும். அவன் "குரு"
ஸ்தானத்திற்கும், அப்பாற்பட்டவனாகும்.
அவனை முழுமையாக "நம்பும்" மெய்யன்பர்
களையும், அவன், "குரு" ஆக்கமாட்டான்.
அவனும், "குரு" ஆகவும் (இருக்க) மாட்டான். அவனை,
நம்பும் மெய் அன்பர்கள் காலாதீத "அது"வாக
ஆகுவார்களே தவிர, "ஜகத்", "ஜீவ",
"நாமரூப" தோற்றமும், திரிகர்த்தாக்க
ளையும், அவர்களின் உவதமாகிய, "பரம
பதத்தையும்", அவர்கள் பெறவும் முடியாது.
ஆகவும் முடியாது! ஆனால் அவர்கள், பிறவா நிலை
யாகிய, "பிரம்ம பதத்தை" நிச்சயம்
பெறுவர். இது சத்தியம். இதை இப்படி என்





உறுதியாக சொல்கிறோம் என்றால்? அவனிடம் திரிகர்த்தாக்களின் "மாயாவோ", சித்தர்களின் "அஷ்டசித்திகளோ", அசகாய சூர ஜீவர்களை ஆட்டிப்படைக்கும் "மாயாமனமோ", அவனிடம், அணுவளவும், இருப்பதில்லை.

ஆனால் அந்த, மாயா மனம் வசப்பட்டவர்கள், "அனைவருக்கும்" அவனிடமும், மனம் இருப்பதைப்போல், ஓர் தோற்றத்தை உண்டு பண்ண முடியும். எப்படியென்றால்? அவன் ஸ்ரீபகவானிலும், அம்சமாக இருப்பதால், அவன் ஸ்ரீபகவானின், "மாயாவை" தொடாமல். ஸ்ரீபகவானின் "ஜாலமாகிய, விளையாட்டை மட்டும்" அவன் கைவசம் கொண்டதால், அவ்விளையாட்டின் மூலமாக அவன் வசம் "மனம்" உள்ளவனைப்போல் "திறம்பட நடிக்கக்" கூடியவனாகும்.

ஸ்ரீபகவான், தொழில் கர்த்தாவாக இருப்பதால் ஸ்ரீபகவானுக்கு, "மாயா ஜாலம்" மாயாவும், விளையாட்டும் அவசியம் வேண்டும்.



உ

(22)

ஆனால் இவனே, தொழிலையே, நாசம் செய்பவனகையால், அதாவது, "பிரவர்த்தியே" அற்றவனகையால், மாயா தேவியின் விளையாட்டு ஒன்றே போதும்!

மேலும், அவன் தோற்றமானது, ஸ்ரீ பகவான் காரியமாகிய "ஜீவ ரக்ஷிப்பு" இல்லை, "ஓர் திட ஞானியின் காரியமாகிய "ஜீவ அழிப்பே" இவன் லக்ஷியமாகும்!

மேலும், அவன் ஜீவ அழிப்பின் நிலையில், "தன்னைத்தானே" தோற்றுவித்துக் கொள்வதால், அவன் தோற்றத்தை, "ஜனனம்" என சொல்லவும் கூடாது, சொல்லவும் முடியாது! "ஸ்திதி" "மரணம்" ஆகிய இம்மூன்றையும், "நிலைக்குத்தக்கபடி" பாவனமார்க்கமாக, சகஜீவர்களுக்கு, தோற்றுகபடி வைத்து, "விளையாடமுடியும்"!

மேலே கூறிய மூன்றும் "உண்டு" என சொல்லவும் முடியாது! "இல்லை" என சொல்லவும் கூடாது!

(இதுவே பிரம்ம ரகஸ்யமாகும்.)

உ





மேலே கூறிய அனைத்தும் நற்பெருமையும் ஆகாது. அவை அஹங்காரமும் ஆகாது. காரணம், அவை ஓர் தட்டுகாணியின் வசதிமையாகும்.

இங்கு, அவனுடைய பிடிமானம், எவையும் இல்லையென்றே சொல்லலாம். அவனுடைய "ஸ்வயஞான அனுபவ ஸத்திய" வாசகங்களை, எவர் "நம்பிக்கையும்", "வைராக்கியமும்" கொண்டு ஏற்றிருக்கிறாரோ, அவர்கள் ஜீவன் முக்தர்களே! "ஸௌபாக்கியமே"! ஸ்ரீமத் "ஸ்ரீயுக்தி" என ஆனது. அதுவே, "ஸ்வயஞானாநுபவ" சுத்த அத்வைதமானது. அதுவே, இதில் கூறும், "அவன் ஆனேன்! அவனே அது ஆனது"!!

அவனே ஸ்வயஞானானுபவமாக இருக்கும் போது, அவனை காண வேண்டாம்! அவனை உணர வேண்டாம்!! அதை அவஸ்யம் கண்டே ஆக வேண்டும்! அதை உணர்ந்தே ஆக வேண்டும்! அவன் அன்றும், இன்றும் என்றென்றும், "உதவாதவனே"! "உதவாக்கரையே"! அவன் அது அன்றும், இன்றும், என்றென்றும் "உதவும் அக்கறையோடு"!





ஓர் பழமொழி உண்டு. "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்!" என்றபடி, அவன் அந்த ஸ்வய ஞான அனுபவம் என்ற, "வைராக்கியமாகிய" புஷ்பத்தோடு, நாராக இணைந்து கொண்டான். ஆகவே, இங்கு அது வேறு, அவன் வேறு இல்லவே இல்லை. நாராகிய அது காரணம் ஆகும்! அதை தம்மோடு, இணைத்து ஐக்கியப்படுத்திக் கொண்ட அவன் காரியமாகும்!

அவனை தேவ தெய்வங்களோடும் (பஞ்சகர்த்தாக்களோடும்) மற்றும், அனைத்து ஸ்ரீ மஹான்களோடும், இணைத்து ஒன்றுபடுத்த முடியாதவனாகும்! முடிவாக "மெய் அன்பர்கள்! இல்லையானால், "அவன்" இல்லை! யுகயுகமாக, அன்பர்களுக்காகவே, தம்மை தோற்றுவித்துக் கொண்டு, ஓர் "படகாக" செயல்படுவான். அதில் "நம்பி" ஏறுபவர், ஜீவன் முக்தியென்ற, கரை சேருவர். ஆனால், அவன் கரை யேறுவதில்லை. அது அவனுக்கு தேவையும் இல்லை. அவன் வரலாம்! அங்கு வினைத் தொடர்பு அவனுக்கு இல்லை! ஆனால், நீ வர முடியாது! நீ வர இயலாது! காரணம் "அவன்" (ஸ்வய ஞான அனுபவத்தை) நம்புவதால், உன்னால் வர முடியாது தான். இது ஸத்தியப் பிரமாண உண்மையாகும்!



ௐ உ ௨௫

நாங்கள் படித்தும், கேட்டும், உணர்ந்த, அனேக ஸ்ரீ மஹான்களுக்கும்; ஸ்ரீபகவான் தன்னைத் தானே, தோற்றுவித்துக் கொள்ளும், அவதாரத்திற்கும்; இந்த மஹா புருஷனன்றிட ஞானியின், அவதாரத்திற்கும். உள்ள வித்தியாசம் என்ன? அவர்களுடைய காரண காரியம் என்ன? இவனுடைய காரண காரியம் என்ன? ஓர் ஏழை வைத்தியத்தின் பதில் — இப்போது யாம் சொல்வது, "புராணக் கதை" (பொய்யான புளுகுக் கதை) போலத்தான் தோன்றும். தெய்வத்தை, உண்டு என்றும்; இல்லை யென்றும்; வாதம் பண்ணி "உண்டு" என்பவர்கள், உண்மையைத்து பொய்யை வாட்டுவர். "அதை" (பரத்தின்) பலனை, அனுபவிக்கிறார்கள். "இல்லை" என்பவர்கள், "இதை" (நாமரூப ஜகஜீவ) பலனை, அனுபவிக்கிறார்கள். இதற்கும் பரத்திற்கும், "நம்பிக்கையே" மூலதனமாகும்: சிவ சமயங்களில், "பிரம்ம லோகத்தில்" ஸ்ரீபிரம்மாவின் முன்னிலையிலும்! "வைகுண்டத்தில்" ஸ்ரீ ஹரியின் முன்னிலையிலும்! "கைலாயத்தில்" ஸ்ரீசிவபெருமான் முன்னிலையிலும்!





"தேவ சபை கூடும்", அது சமயம், "ஸப்த ரிஷி களும்", மற்றும், அனேக "ஸ்ரீ மஹான்களும்", ஓர் ஆலோசனை சபை கூட்டுவதுண்டு. இந்த பூமி மட்டுமல்ல. கோடானு கோடி பூமிகளிலும், வாசம் செய்யும் குறிப்பாக "மனம்" படைத்த "மனித" இனத்தையும், மற்றும் அனைத்து ஜீவ கோடிகள் நிமித்தமாகவும், "ஜீவ ரக்ஷயின்" நிமித்தமாகவும், "பக்குவ ஆன்மாக்களின்" நிமித்தமாகவும், எந்தெந்த காலங்களில், எங்கெங்கே எப்போது, என்ன செய்ய வேண்டுமென்ற "காலக் கணக்கு" போடுவார்கள். இந்த திட்டத்திற்கு, "ஜீவ உத்தாரணம்" எனப் பெயர்.

ஜீவ உத்தாரணம்:- ஜீவ ரக்ஷிப்பும் உண்டு, ஜீவ அழிப்பும் உண்டு. ஜீவ அழிப்பு என்பது சம்ஹாரம் அல்ல, ஜீவன் முக்திக்கு, உரிய மார்க்கம். இவை இரண்டும் சேர்ந்ததே ஜீவ உத்தாரணமாகும்.





உ

இச்சீவ உத்தாரணத்தின் நிமித்தம் "பெரும்பாலும்" ஜீவ ராசிப்பு என்பது, திரிகர்த்தாக்களின் காரியமாக இருக்கும். குறிப்பிட்ட "ஒன்றாரண்டு" இடங்களில், ஜீவ அழிப்பும் உண்டு!

ஸ்ரீமஹான்களும் ஸப்த ரிஷிகளும் தோன்றுவதாக இருந்தால், "பெரும்பாலும்" ஜீவ அழிப்பாகவே (ஜீவன் முக்தி நிமித்தமாகவே) இருக்கும். சிலருக்கு, சிலசமயங்களில், ஜீவ ராசிப்பின் நிமித்தம், செயல்படுவதாக தோன்றும்! மேலும் ஓர் முக்கியம் என்னவென்றால் ???

"ஸப்த ரிஷிகளும்/ஸ்ரீமஹான்களும்"/ திரிகர்த்தாக்களும்"!

அவதார காலங்கள், எப்படி இருக்கும் என்றால்?

நமக்கென ஓர், "காலத்தை" (தோற்றம், சஞ்சாரம், அதன் காரியம், பின்னர் மறைவு) இவைகள், "திட்டமிட்டு" சூரியனைச் சுற்றும், கோள்கள் எப்படி, "நேர்" கோட்டையும், "சம" தூரத்தையும், "சுற்றும்" வேகத்தையும், நேரத்தையும், அறியபடுத்திக் கொண்டு, சஞ்சாரம் செய்கிறதோ,



உ

(28)

அதேபோல், அவர்கள் ஓர் "கட்
டுப்பாட்டுடன்" நாம் எல்லோரும்,
காரியங்களை, காரண சொரூபமாக,
இருந்து முடிப்பர். இது ஓர் வரை
முறைக்கு, உட்பட்டதாகும்.
ஆனால் இதில் கூறும், "கடவுள்"
என்று சொல்லப்பட்டவன், காலத்தை அதன்
நிலையில் இருந்து, தமக்கென ஓர், "காலத்தை
தமக்குத்தாமே
ஏற்படுத்திக் கொண்டாலும், அவன் (வருவதோ,
செயல்படுவதோ, மறைவதோ) அவன் தான், அறி
வானேயன்றி, மற்றவரும் (திரிகர்த்தாக்களும்)
அறியார்! அறிய முடியாது. இதற்கு ஓர் விளக்கம்,
கொடுப்பது என்றால்? "எரி நட்சத்தி
ரம்"! என ஒன்றுண்டு. அந்த எரி நட்சத்திரமானது
காலமும் அறியாது! நேர் கோட்டையும் அறியாது!
சமதூரமும் கிடையாது! சுற்றும் வேகமும் தெரியாது!
சீராக
"வட்டமாக" செல்வதில்லை! "குறுக்
கும் நெடுக்குமாக"! அதி வேகமாக
செல்லும். அது செல்லும் வேகத்தில், எதிரில் எந்த
கோள்கள் வந்தாலும். அதை அடித்து நொறுக்கி துகளாக்கி
"நாமரூபத்தை" கெடுத்து, தன்னுடை



௨௯

"ஊர்ந்துக்கொண்டு" சென்றுவிடும்! இதுவே இந்த "திடஞானியின்" நிலையும்! அவன் "வியாபாரம்" "விளம்பரம்" எந்த "பிரவர்த்தியும்" அற்ற தன்மையில், சஞ்சாரம் செய்வதால், அவன் "பார்வையில்" பட்டதை நாமரூபம் இழக்கச் செய்து, அவனைய "அதனுடன்" இரண்டறக் கலக்கச் செய்துவிடுவான்.

குறிப்பு:- அவன் பார்வையில் பட்டதை என்றால்:- "ஸ்வயஞானுபவமான" (அவனும் அதுவும் ஒன்றே) "அதனிடம்" பரிபூரண "நம்பிக்கை" எந்த அன்பரிடம் இருக்கிறதோ, அவரே அவன் பார்வையில் பட்டவராவார்! அவர் கதை முடிந்துவிட்டதென அறிக! அவருக்கு கண்டிப்பாக ஜன்மா இல்லை! அவர் "ஜீவன்முக்தரே"!!





இதுவே, ஸ்ரீ மஹான்களும்! திரிகர்த்தாவாகிய தேவ தெய்வங்களும்! ஸப்த ரிஷீஸ்வரர்களும்! அவதரிக்கும் தன்மையும்! அந்த ஒருவன், அவதரிக்கும் தன்மையுமாகும்!

ஸ்ரீ மஹான்களும்! திரிகர்த்தாக்களும்! ஸப்த ரிஷிகளும்! அவதாரம் செய்வதென்பது, திட்டமிட்டு, செயல்படுகிற தன்மையினால், "**அவர்கள்**" ஓர் "**காரணத்தை**" முன்வைத்து, பக்குவ ஆன்மாக்களின் "**காரியத்தை**" பின்வைத்து முடிக்கிறார்கள் என்றறிக!

அந்த ஒருவன், பக்குவ ஆன்மாக்களின் "**ஜீவன் முக்தி**" என்ற "**காரியத்தை**" முன்வைத்து, நாம் "**காரண**" சொரூபனாக, இருந்து கொண்டு; அவர்கள் காரியத்தை, முடிக்கிறான் என்றறிக!!

3 ஸ்ரீ பகவானின் அவதார காலங்களிலும், ஸ்ரீ மஹான்களின் அவதார காலங்களிலும், சிவர் சிவ இடங்களில், நமக்கென, சிவ பக்குவ ஆன்மாக்களையோ, சிவ மஹாத்மாக்களையோ, சிவனார் அழைத்துச் செல்வார் எனப்படித்திருக்கிறது! கேட்டும் இருக்கிறது! அந்தந்தியில், இந்த மஹா புருஷனும், முன்போ, இப்போதோ அவன் மீது பக்தி உள்ள, மெய்யன்பர்களையோ, மெய் அன்பர்களையோ, நமக்கு உபகாரமாக (உபகாரியாக) இட்டுச்செல்வதுண்டா? இல்லை நான்தான், தனித்துச் செல்வானா?



உ



ஏழை வைத்தியத்தின் பதில்:—
அவன் "எவரையும்" இட்டுச்
செல்வதும் இல்லை. "எவரும்"
அவனைப் பின் தொடரவும், முடியாது.
அவனும் "எவரையும்" பின் தொடர்ந்து,
செல்பவனும் அல்ல! "சகோரப்ப
க்ஷி" என ஓர் பறவையைப் பற்றி கேள்விப்
பட்டிருப்பாய். யாமே பல இடங்களில், ஸத்
சங்கத்தில், சொல்லியும் இருக்கிறோம். இரண்
டொரு மடல்களிலும், எழுதியும் இருக்கிறோம்!
அப்பட்சியானது, "துணைத்தோ
டும்" சேருவதும் இல்லை, சேர்ப்பதும் இல்லை!
இனச் சேர்க்கையின் மூலம், முட்டையிடுவதும் இல்லை!
அடைகாப்பதும் இல்லை! சூரிய வெப்பத்தால், முட்டை
யிலிருந்து, வெளிவரும் குஞ்சும், "துர்வா
ஸனைநிறைந்த" இவ்வுலகுக்கு, வர
பிடிப்பதும் இல்லை. அதுவும் மேலேயே சென்றுவிடும்.
அப்பறவைக்குக், விதிமுடிந்து "மரணம்"
சம்பவித்தாலும், அந்த இறந்த பறவையின் தூலம்,
"சூரிய" வெப்பத்தால் தகிக்கப்பட்டு,





"வாயுவால்" சிதறடித்து, பொடிப் பொடியாகி, "அணுவாகி", அது நிர்மலமான, "ஆகாயத்துடன்" கலந்து விடும்!

அப்பறவையையே, "சுதந்திரப்பறவை" என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். அப்பறவையைப் போல வந்தவனே, இந்த மஹாபுருஷனும்! அப்பறவையானது, தன் இனத்தோடு சேராமலும், இனத்தை தன்னோடு சேர்க்காமலும், இருப்பதைப்போல், அப்படி இருப்பதில்லை! அவனிடம் இருப்பவைகளில் "இனிமை", "எளிமை", "கனிவு", "பணிவு", "பொறுமை", "அன்பு" ஆம்!

இவை ஆறும் கலந்த "புனித ஜீவஸ்வரூபம்" (ஓர் பக்குவ ஆன்மாவின் தன்மை) நிறைவாக இருக்கும்! அவனுடைய "வாழ்க்கையே" அனைவருக்கும் "சாதனா" பாடமாக அமையும்! பெரும்பாலும், "போதனை" அவனிடம் இருப்பதில்லை! ஒழுக்கமுடன் கலந்த, உள்ள உருக்கமும், கண்ணீர் பெருக்குமுடன் கரைந்த "பக்தியே" ஞானத்தின் அஸ்திவாரம் என்பான்.





"புலி" வாயில் போன மாமிஸம், எப்படி திரும்பவும், வெளியில் வராதோ, அதைப்போல் "யான்" வாயில் போன, கரும்பும் எப்படி திரும்பவும் வெளியில் வராதோ, அந்நிலை தான், அவன் நிலையும்.

"சேய்" நோய்க்கு; "தாய்" மருந்து உண்டு, "சேய்" நோயை, "தாய்" நிவர்த்தி செய்வது போல், "அன்பர்கள்" உள்ளும், புறமுமாய் தாம் நிறைந்து, "தம்பர ஒலியால்" அஞ்ஞான இருளை, தாமாக அகலச் செய்தும்; "தம்பர ஒளியால் ஞான தீபத்தை" ஏற்றியும்; அன்பர்களின் உடலும், உள்ளமும் "நோகாமல்" "பக்தி" என்னும் ஊசியில் "ஞானம்" என்னும் மருந்தை ஏற்றி, "எவரும்" அறியாமல் மருந்து செலுத்தி, "ஜீவன் முக்தி நீயாகவே" நீ இருக்கிறாய். நீ வேறு அது வேறு அல்ல என்ற உணர்வை கொடுத்து, "அதுவாகவே" ஆக்குவான் அவன்



உ

(34)

திரும்பவும் ஏன் / எப்படி "ஜாக்ரதை" கொடுக்க முடியும்?

அவனுக்குத்தான், ஜீவ அழிப்பின் வேலையே தவிர, அன்பர்களுக்கு அங்கு என்ன வேலை? ஏன் உடன் கூட்டிச் செல்ல வேண்டும்?

"அங்காங்கு! அப்போதைக் கப்போது! ஏங்கும்" பக்குவ ஆன்மாக்களில் மட்டும் ஒருவருக்கொருவர், உபகாரியாக இயங்கச் செய்து, அவன் பணியை முடிப்பதுடன், அன்பர்களையும், ஒருவருக்கொருவர் "சேவை" என்பதன் பேதம் இல்லாமல் ஜீவன், ஊர் என்றும்; நாடு என்றும்; தேசம் என்றும், சுட்டிக்காட்டி, ஐக்கியப் படுத்துவதே அவன் காரியமா? எவரையும் உடன் அழைத்துச் செல்வதுமில்லை! ஏதும்!

"அப்போதைக்கப்போது" அருள் அமுதம் தந்து, ஆட்கொள்ளும் அவன் "அவனே" (ஸ்வய ஞான அனுபவநாலே) நம்பி அனுபவிப்பவர், "அது"வாகவே ஆவர். இது ஸத்தியம். ஸ்ரீ பகவானும் மற்றும் ஸ்ரீ மஹான்களும், நேரில் கண்டு "புதுமக்கு" சம்பந்தமாக இருந்தால், ஸ்ரீ மஹான்களையோ, பக்குவ ஆன்மாக்களையோ, அப்போதைக்கப்போது" தருவித்துக் கொள்வர்." என்பது ஸத்தியம்! அங்கு அவர்கள் மாயா காரியம் பண்ணுவதும்! அவர்களுக்கு அந்த "மாயா காரியம்" இல்லாமல், அவர்கள் செயல்பட முடியாது. "பிரவர்த்தியின்" காரியம் அவர்களுக்கு! "நிவர்த்தியின்" காரியம் இவனுக்கு.



# உ

ஓர் சிறிய சந்தேகம்? அதாவது?

ஹேபாபாஜி! எந்த அன்பர்களும், அவர்கள் "ஊருக்கோ! வீட்டுக்கோ!" அழைத்தால், உங்கள் வாக்கில், வரும் வார்த்தையாவது: "அவன் அனுப்பினால் வரும்!" என பதில் வருகிறது. இதைப்பற்றி, இரண்டொரு, கேள்விகள் வருகிறது? அதாவது?

1 "அவன் என்பவன்?"

2 எல்லாம் ஒன்றே! அதுயாமே!! என்ற நிலை பெற்ற, சுத்த "அத்வைதியான" தாங்களுக்கு, அன்னியம் ஏதுவுமில்லையே? அப்படியானால் அங்கு அனுப்புவது "யார்?" வருவது "யார்??"

3 அவன் அனுப்பினால் வரும்! என்றால் அது, பொய்யான, வார்த்தையாக தோற்றுகிறதே! அது "பொய்யா? மெய்யா??"

4 ஓர் நிலையில், "அவனே" தாங்களாக இருக்கும் போது, அவன் "தனியே!" எங்கிருந்து வருவான்? இவ்வார்த்தை, எங்களை ஏமாற்றவா? அல்லது உங்களை நீங்களே மறைத்துக்கொள்ள, வெளிக்காட்டிக் கொள்ளவாகாது என்ற "பணிவா???"



உ (36)

(1) அவன் என்றால் எவன்???

பதில்:— அவன் என்றால், எமது ஐயனாகிய திருடன் "கண்ணனே"!

இந்த உடலைப் பொறுத்தவரை, "நான், எனது" முழுமையாக விட்ட நிலையில் (நான் இறந்த தன்மையினால்) நாம ரூப, ஜகத் ஜீவ சொரூபங்களின் "பிணைப்பும்" "இணைப்பும்" முழுமையாக இறந்தன! "எல்லாம் நீயே! எல்லாம் உனதே! எல்லாம் நலமே!" என ஆன தன்மையினால், எல்லாம் கண்ணனே என ஆகி விட்டது. எல்லாம், அவன் ஆன தன்மையினால் "நாமும்" அவன் கைப் பதுமையாகவும்; "யாம் எம் கண்ணனாகவும்" இருக்கின்றோம்! (யாமே கண்ணன்! கண்ணனே யாம்!! நீயும் கண்ணனே.)

(2) எல்லாம் ஒன்றே! அது யாமே! என்ற நிலை பெற்ற சுத்த அத்வைதியான தங்களுக்கு அன்னியம், எதுவும் இல்லையே! அப்படியானால் அனுப்புவது யார்? வருவது யார்??



உ

பதில்:— யாம் அத்வைதிதான் ஸித்தியடை
ஆனால் "நீ துவைதி" ஆகத்தானே
இருக்கிறாய். நீயும் எம் போன்று, அத்வைதி
ஆனால், இக்கேள்வியை நீ கேட்க மாட்டாய்.
கேட்க மாட்டாய் என சொல்வதை விட கேள்வி
கேட்டே, "நீ இருக்கமாட்டாய்"!
புரியவில்லையா? நன்கு கவனி! எம்மை, உன்னை
விட்டு, அன்னியமாயிருப்பதாக கற்பனையால்
பார்ப்பதாலும். உன் ஊர்! உன் வீடு! என (உன் உடைமையாய்)
உனக்கு, அன்னியமாய் இருப்பதாக, கற்பனை பண்ணி
யதாலும். இந்த "மண்பொம்மை
யை"! அதே மண்ணுவான இடத்திற்கு, வாருங்
கள் என, அழைக்கிறாய். "மண்ணும்" வராது!
சைதன்யமான, "ஆன்மாவும்" வராது!!
அம்மண்ணை, "வினையின்" படி, ஆட்டி வைக்கும்,
"மாயாமனமானது"! அந்தாவத்
தை, "வினை" யென்ற "விதி" இருந்தால், கிட்டச்
செல்லும். இவைகளை, யாம் உணர்ந்த தன்மையால், வினை
யின் படி, விதி தேவன் அனுப்பி வைத்தால், வருவோம் என்று
சொல்வதை, சுற்று உபசார வசனமாக, "அவன்
அனுப்பினால் வருவோம், எனப்பதில் சொல்லி இருக்கும்.
இங்கு ஓர் உண்மையை, உரை வேண்டும். அது எது?



"விண்" என்ற "மண்" பொம்மையை யாமாக மயங்கி, அப்பாவனையின் மயக்கத்திலேயும், உன் உடலையும், உன் ஊரையும், உன் வீட்டையும், "உனதாக" பாவனைபண்ணி, "மதி" மயங்கி அலைகிறாய்! ஆனால் யாமோ, அறிவு சொரூபமாக இருந்து கொண்டு நடந்தபதில் அனுப்புபவனும் இல்லை! வருபவனும் இல்லை! சொல்கிறோம்! உன் "மனமே" மயக்கமாக கேள்வி கேட்டு, அதே "மயக்க" பாவனையால், பதில் தருகிறோம். அவ்வளவுதான்!

(3) அவன் அனுப்பினால் வரும்! என்றால் அது பொய்யானவார்த்தையாக தோன்றுகிறதே! அது பொய்யா? மெய்யா??

பதில்:- பொய்யான உலகத்தில், பொய்யையே பேசி, பேசி, மன ஆட்டம் போடும் உனக்கு யாம், "பொய்" சுட்டிக்காட்டி "மெய்யை" உணர்த்துகிறோம். புரியவில்லையா? உன் வாசகம்:- வந்தேன்! இருந்தேன்! போனேன்! கொடுத்தேன்! வாங்கினேன்! சாப்பிட்டேன்! என தோராறு கோடி, வார்த்தைகளிலும் "ஏன்? ஏன்?" என, கேள்விக்குறியையே போட்டு போட்டு, இன்னமும் விடைதெரியாமல், பொய்யிலேயே ஊறிப் போயிருக்கிறாயே. பின் எம் வாக்கு, எப்படி சத்தியமாய் தோன்றும்? "நாமரூப" ஜகத், எந்த விதம், உனக்கு பொய் என, அனுபவநிலையில், தோன்றுமோ அந்த விதம், எம் வாசகமும், சத்தியமாக தோன்றும்!



(4) உ 

ஓர் நிலையில், அவனை தாங்காது, இருக்கும் போது, அவன் தனியே, எங்கிருந்து வருவான்? இவ்வார்த்தை, எங்கிறே மாற்றுவரா? அல்லது உங்களை நீங்களே, மறைத்துக் கொண்டு வெளிக்காட்டிக் கொள்ளலாகாது, என்று பணிவரா?

பதில்:- "பணி" வாகவே இதை, ஏற்றுக் கொள்கிறோம்!

உன்னை ஓர் கேள்வி கேட்கிறோம்? கூர்ந்து கவனிப்பாயாக நீ உன்னுடையது என் "மனமடமையால்" சொந்தம் கொண்டாடும், "ஊரோ. வீடோ."

(A) நீ அழைக்கும் போது, இந்த ஏழை வைத்தியம், என்ன பதில் தர வேணுமென்று எதிர் பார்க்கிறாய்?

(B) "நான். இன்று" (இன்ன கிழமை) "வருகிறேன்" என, சொல்ல வேணுமென்று எதிர்பார்க்கிறாயா?

(C) யாம் கண்ணனே! யாம் இன்ன கிழமையன்று, உன் ஊருக்கோ! உன் வீட்டுக்கோ!! வருவோம் என்று பதில் எதிர் பார்க்கிறாயா?

(D) யாம் ஆத்மாவே! யாம், சர்வ வியாபி யாக இருக்க, உன் வீட்டிலும், உன்னிலும், **யாம்** நிறைந்திருக்கிறோமே, பின் ஏன்? எங்கு? எதற்காக? எம்மை அழைக்கிறாய்?? என்ற பதில் எதிர் பார்க்கிறாயா? எம்மை அழைக்க முடியுமா? எம்மை அழைக்க வாக்கு உண்டா?



பதில் :- அவன் அனுமதியில் வருவோம், என்ற வாக்கானது "இறை" நிலையிலும், "பர" (குரு) நிலையிலும், இருந்து வரும் "பணி" வான வாக்காகும்! (ஜீவநிலை இல்லை)

இதை கவனிக்கவும்!!!

A "நான், எனது" என்ற ஜீவ நிலை! இறந்து, புண்ய காலம், ஆகிவிட்டது!

B "அது" செயல்படாத ஒன்றாகும்! அங்கு, வாக்கும் இல்லை! எந்த செயலும் இல்லை!!

C "அவன்" (ஸ்ரீபகவான்) லௌகீகத்திற்கும், தெய்வீகத்திற்கும் மட்டும், பயன்படுவான்! உன் காரியமும், லௌகீகமும், தெய்வீகமும், கலந்தே இருக்கிறது ஆனால் "யாம்" ஜீவநிலைக்கு வரமாட்டோம்! வர இயலாது! வரக்கூடாது! அவன் (கண்ணன்) நிலைக்கு வந்து வந்து சென்று விடுவோம்! அங்கு நிலைப்பதில்லை! ஆகவேதான், யாம் அவன் பாவனையில், பதில்தருகிறோம்! அவன் அனுமதியில் வருவோம். என்ற வாக்கானது, "தெய்வநிலையின் ஸத்யமே"! உலகநிலையில் இல்லவே இல்லை! பரநிலையில் சக்தி பொங்கியே!!





"இறை" வனாகிய ஸ்ரீ பகவானே,
"பரமாகிய" ஸ்ரீ ஸத்குருவோ,
தம்மை, வெளிக்காட்டிக்கொள்ளாது, (விளம்பரத்திற்கு வராது)
காட்டிக்கொள்ளக்கூடாது! அப்படி அவைகள் தன்னை
காட்டிக்கொண்டால், "அதுதன்னைத்
தானே மாசுபடுத்திக்" கொண்ட
தன்மையாகும் என, உணர்வுபூர்வமான, ஸ்ரீமஹான்
கள், சொல்லுவார்கள். காரணம்?
"தமக்கு" எதுவும் "அன்னியம்" எதுவும் இல்லாத
தன்மையாகும்! இங்கு ஓர் முக்கியத்தை உரைவேண்டும்.
"பரம்" என்றவ், "யோகமாயா" சம்பந்
தம் கொண்டதாகும்! ஆனால் பரத்திற்கும், யோகமாயா
வுக்கும், ஏத் "தொடர்பும்" கிடையாது என்பதே
ஸத்தியம்!
"ஸ்ரீபகவான்" என்றவ் "யோகமாயா"
சம்பந்தம் கொண்டவன்! ஆனால் இங்கு, ஓர் சூட்சுமமான
"நாமரூபம்" தாங்குவதாக, "வாக்கால்"
விளம்பப்படுவதால், வாக்கிய விளக்கத்திற்காக,



உ

ஸ்ரீபகவான், மாயாவைப் "பற்றி"
இருக்கிறான் என, பேசப்படுகிறது!
"ஜீவன்" என்றால் இவனும்!
ஸ்ரீபகவானும்/பரசொரூபமும்! "ஒன்றே!"
இங்கு "விளையாட்டின்" நிமித்தம்,
மாயாவின் "மனதால்" (பற்றப்பட்டிருக்கிறான்)
எனப் பொருள் கொள்ளல் வேண்டும்! ஆகவே,
பரம் என்றால், நிர்க்குணம் என்றும்; ஸ்ரீபகவான் என்றால்
ஏககுணம் (ஸத்வகுணம்) என்றும்; ஜீவன் என்றால்
முக்குணமும் (நிலை கண்டு துர்க்குணமும்) என்றும்;
உரை வேண்டும்! ஆகவேதான்?
ஜீவனானவன், மனதால் "நான் எனதை"
விடமுடியாத்தன்மையால் (பந்த ஜீவன்) என்றும்;
ஸ்ரீபகவானானவன், அறிவால் நான் எனதை, விட்ட நிலை
யில், அன்பால், அனைத்து மனித இனத்தையும், அரவணைக்கும்
நிலையில் "யாம்" என பேரானந்தமாக இருக்கிறான்
என்றும்; பரசொரூபமானது, செயல்படாத்தன்மையால்,
செயல்படுவதற்காகவும், செயல்படுத்துவதற்காகவும்,
யோகமாயையை பயன்படுத்திக் கொண்டு, "அனைத்து
ஜீவகோடிகளையும், அரவணைத்துக் கொண்டு "நாம்" என்ற
நிலையில்பிரம்மானந்தமாக இருக்கிறது! இதுசர்வசாட்சியாகும்.



உ



இந்த ஔஷத வைத்திய முறை, இதில் கூறிய, "மௌனமாய்" இருந்து கொண்டு செயல்படுகிறது! ஆதல், ஜீவ நிலை கண்டு, செயல்படுகிறது! ஜீவ நிலையென்பது கடந்து, நடந்து, முடிந்து, இறந்த நிலையாகும். ஆகவே ஜீவ "கர்த்தத்துவத்தையும்" / "ஈசகர்த்தத்துவத்தையும்" / உணராமல், "அவன் அனுப்பினால் வரும்!" என வாக்கு வருவதாய் தோன்றுகிறது!

ஓர் நிலையில், நீ வாதம் புரியலாம். ஹே பாபா! யாம், உங்களை அன்புடன் அழைத்தோமா, நீங்கள் எங்கள் ஊருக்கு, எங்கள் வீட்டிற்கு, வந்தீர்கள் என கேட்கலாம்? யாம் சொல்கிறோம். ஹே குழந்தாய்! எம்மை அழைத்தேன் என்றும், யாம் உன் ஊருக்கு, உன் வீட்டிற்கு வந்தோம், என்றும் கூறுகிறாயே? அது எத்தனை "மடமை" தெரியுமா? அப்படியானால், உன் ஊரில், உன் வீட்டில், உள்ள "நீயார்?" உன் அம்மா அப்பா, "யார்?" உன் குடும்பத்தினர், உறவு, சுற்றம், நட்பு "யார்?" "அனைத்தும் யாமே"! நான் அழைத்தேன் சுத்தப் பொய்யே! அது என்றோ? நீங்கள் வந்தீர்கள் என்றோ? சொல்வதனைத்தும் உன் "மயக்கமனமே"! அது உன்னை, பாழ் படுத்தவும் செய்யும்! உன்னை பக்குவப்பட்டது போல், மாற்றவும் செய்யும்! ஆகவே உன் மனதிடம், சர்வ ஜாக்கிரதையாக இருந்து, "மனதை" நாசம் செய்வாயாக!

உ



ஸ்ரீ பரம்பொருளான நாங்கள் வாக்கில்
இருந்து ஒவ்வொரு "கணமும்"!
"குருதேவா!" என்றோ,
"ஹரே ராம்!" என்றோ,
"ஹரே கிருஷ்ணா!" என்றோ,
"நாமாக்கள்!" நாராயணா என்றோ. வருவதை கவனிக்கிறோம்.
ஆழ்ந்து கேட்கிறோம். உணர்வாய் நோக்குகிறோம்.
சுத்த அத்வைதிக்கு, இப்படி நாமாக்கள், தேவையில்லை
யென, "தற்கால" அத்வைதிகளின்,
கருத்தாகும். இப்படி "நாமரூப" சம்பந்த,
வாக்குகள் வந்தால், அவர்கள் அத்வைதியல்ல. அவர்
த்வைதியே, என்றும் கருதப்படுகிறது. இது பற்றி
நாங்கள் கருத்து என்ன?
பதில் :- பரம்பொருளான நாங்கள் என்று உன் வாசகம்
வருகிறதே, அதை எப்படி உறுதிப்படுத்துகிறாய்?
கேள்வி :- உடல் உவகமாந்தர் (ஞானி / அஞ்ஞானி)
நாங்கள் எப்படியும் பார்க்கலாம்! கேட்கலாம்!
அறியலாம்! உணரலாம்! அது பற்றி பேசலாம்! ஆனால்
"திருவடிக் குழந்தைகளான

உ





எங்கள் அனைவர்க்கும், "பரம்பொருள் ஒன்றே"! அது நாங்களே! அது நாங்களே! இது உறுதி!

பதில் :- அதை, இந்த ஏழை வைத்தியம், தலை வணங்கி, மிக மிக பணிவாக, ஏற்றுக் கொள்கிறது! இதை கவனிக்கவும்!

இந்த ஏழையின், "அனுபவமே" உங்கள் அனைவர்க்கும் அனுபவ பாடமாகும்!

(1) "குருதேவா!" என்றால் ஸ்ரீ பராசொரூபத் அமையும். அதனால் தை, உருக்கமுடன், அழைப்பதாகவும் சந்தேகம், அயர்வு, சோர்வு, களங்கம், சஞ்சலம், இவைகளின், "கலக்க பயம் நீங்கும்"!

(2) "ஹரே ராம்!" என்றால், ஸ்ரீ பகவான் நாமாவளியில், ஸ்மரிக்கும் வண்ணம் எண்ணம்! சொல்! செயல்களிலும்! "ஸத்தியத்தையும்"! "தர்மத்தையும்"! அதாவது வாக்கையும், அதன் செயல்களையும் காத்து, "தற்கபன சக்தியுடன்"! நன்நிலை மாறாமல் இருக்கச் செய்வதாகும்!



③

"ஹரே கிருஷ்ண"! என்றவ், ஸ்ரீ பகவன் நாமாவை நினைத்த வண்ணம்; இது "கலிதோஷ" நாசமாக இருப்பதால். மஹாபாரதத்தில் "வஞ்சகம்! சூது! பொய்!" என மூன்றும் தலைவிரித்தாடிய காலத்தில், ஸ்ரீபிரபுவும் "வஞ்சக கண்ணன்!" என்ற "நாமம்" தரித்த வண்ணம். எங்கெங்கு அக்கோர குணங்கள் தலைவிரித்தாடுகிறதோ, அங்கெல்லாம், மறைமுகமாகவே, அக்கோர குணங்களைச் செலுத்தி, "அதையும்" அழித்தான். பின்னர் "இதையும்" அழித்துவிட்டான். அத்தன்மை போல், ஓர் ஸாதகன் ஸ்ரீ கிருஷ்ண நாமாவை, உருக்கம் உள்ளத்துடன் "ஹரே கிருஷ்ண"! என அழைப்பாராயின், அவன் அச்சாதகன் அறியா வண்ணம், அவன் "வினையை" எமது ஐயன் செய்து முடிப்பான் என்பது, ஸத்தியமே!

மேலும் இந்த ஏழை, வறட்டு வேதாந்தமும்! வறண்ட ஞானமும்! வறண்ட அத்வைதமும்! ஏற்பதும் இல்லை! போதிப்பதும் இல்லை! கனிந்த ஞானமும்! அனுபவ அத்வைதமும் தான், ஏற்புடையதாக இருக்கிறது. மேலே கூறிய "மூன்றும்" அனுபவம் தருவதாகும்.



மேலும், நாமரூப உவமையும், அதன் குண நிச்சயங்களையும், நீளன்னதான், பாவனையன்றி, இல்லை இல்லை இல்லை, சாதனையெனத் தோன்றினும், அவைகள் உன்னை **இல்லாமல்** செய்து விடும்!

அதை ஸ்ரீபகவன் **நாம** துணையுடன் செய்தால், அந்த நாமரூப குணங்கள், அவனிடம் சென்று கலந்து மறைந்து விடும்! காரணம்?

இக்கலியுகத்தில், நாம ரூப குண தோஷங்கள் "**பழக்க**" (வார்த்தையால்) "**வழக்க**" (செய்கையால்) ஒன்றுடன் ஒன்று பின்னவிட்டு பிணையாகின்றன! இவை அனைத்தும் "**மெய்**" கற்பனையாக இருந்தாலும், அவைகள் படுத்தும்பாடு எவராலும் தாங்கமுடியவும் இல்லை, தாள முடியவும் இல்லை, வாழமுடியவும் இல்லை! அந்த மனம் பிறந்த இடமாகிய, **மாயா ஸ்ரீபகவானிடம்** நிர்மூலமாக விட்டாலன்றி வேறு கதியும், வேறு மார்க்கமும் இல்லையென, பிரமாணமாகச் சொல்லலாம். இது இந்த ஏழை வைத்தியத்தின் அனுபவமாகும்! ஆனால் யாம், மற்றவர் "**அனுபவத்தை**" புறக்கணிக்கவில்லை. அதையும் கூட வணங்கி பணிவாக ஏற்றுக் கொள்கிறோம்.

(அவரவர் ஸ்ரீபகவன் நாமா, அவரவரைக் காக்கும்)

உ





நாராயணன் எனச் சொன்னால் மூர்த்தி ஆகும்!

"நாராயணா"! எனச் சொன்னால், "பக்தி" நிலையில், லௌகீக, இன்பதுன்பத்தை துடைத்து, தெய்வீகநிலையில், "பேரானந்தத்தை" கொடுக்கும்; "குணதோஷம்" அற்ற நிலையில், "சர்வ மங்களங்களையும்! கொடுக்க வல்லதென, ஸ்ரீமஹான்கள் கூறுவர்!

"நாராயணாம்" என "ஓம்" ல் முடிக்கலாம், அதை, ஆத்மானுபவம் பெற்ற "தத்துவ" ஞானிகள், பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும் இணைத்து தங்கள் அனுபவநிலையில், அது ஓர் அளவிடற்கரிய மா பெரும், "நீர் பரப்பு" எனச் சொல்லி, அதையே, "பிரம்மானந்த சமுத்திரம்" என, உவமானமாக, ஏற்றுக் கொண்டு, அதையே, "நிஷ்தரங்க (அலையற்ற) சமுத்திரமாக, அனுபவிப்பர்! உலகியலில் ஜலமே பிராணனாகும்!

ஆனால், பக்தியில் திளைத்த ஸ்ரீ பாகவதோத்தமர்கள், அந்த ஸ்ரீநாராயண(ணன்) என்னும் நாமாவை, மூர்த்தியாக தியானிப்பர். ஞானத்திற்கு, அஸ்திவாரமாக மங்களம் என, எடுத்துக் கொள்ளலாம்! அங்கு நாமரூபம் தேவையில்லை!



உ



ஹே எம் அன்பின் அமுத குழந்தைகளே!
மேலே நீ கூறிய, குருதேவா! ஹரே ராம்!
ஹரே கிருஷ்ணா! நாராயணா என்ற அனைத்து
"நாமாக்களும், எமக்
காகயாம்!" ஜபிக்கவும் இல்லை.
எமக்காகயாம் பாடவும் இல்லை!
எமக்காகயாம், அழைக்கவும் இல்லை! இந்த விநாடி வரை
யாம் ஜபிக்கும், அவை அனைத்தும், "உங்கள்!"
நலனுக்காகவும்; உங்களுக்கு, "எம்" அனுபவம்
கூட வேண்டும், என்பதற்காகவும்; "வாய்"
திறக்காமல், இருக்கும் குழந்தைக்கும், "பழத்தை"
உரித்த
(அமுதை) அக்குழந்தைக்கும், "அன்பாய்"
ஊட்டும் நிலையில்; கொழுந்தே! உனக்கு, அமுது
ஊட்டியவள் யார்? என "மனமுருக"
கேட்கும் பொழுது, அக்குழந்தை வைராக்கியமாக
வாய் மூடி இருந்தாலும், எம் "கனி" மொழியைக்
கேட்டு தம் வைராக்கியத்தை மறந்து, பவள வாய் திறந்து, எமக்கு பதிலுரையாக
"அம்மா!" என வாய் திறக்க பொழுது, அவ்வாயில்,
"அமுதமாகிய" பழத்தை இட்டு, சுவைத்து,
பரியாரச் செய்து, "ஹரி" துயில் தாங்கச் செய்த
தன்மை போல், உங்கள், அனைவருக்கும், ஸ்ரீ இறை குரு,
நாமாவை, ஊட்டி விட்டோம்.



(௫௦)

உ

# "ஹரே கிருஷ்ண"!

என்ற, ஸ்ரீ கிருஷ்ண நாமமானது இக்கலி
யுக தோஷங்களுக்கு, "விஷம்"
போன்றதாகும் என, "பாரதபோர்"
நடந்த காலத்தில், நமக்காகவே, வாழ்ந்து காட்டிய,
ஓர், "அனுபவ" ஸ்ரீமஹான் சொல்லியிருக்கிறார்.

# "எரி நக்ஷத்திரம்"!

என இம்மடலில்
திடஞானியின், வருகையைப்பற்றி, குறிப்பிட்டிருக்கிறோம்.
உலகியலில், அது பற்றி, பேசும் போது, அது ஓர் அபாய
நக்ஷத்திரம் என்றும், அதி பயங்கரமான ஓர் "எரி
பொருள்" (அக்கினி பிழம்பு) எனவும் சொல்வதுண்டு.
இங்கு, இத்திடஞானிக்கு அதை ஏன் ஒப்பிடுகிறோம் என்றால்?
பிரம்மன் சிருஷ்டிக்கும், அப்பால் பட்டவன் என்றும்,
அவன், தன்னைத் தானே தோற்றுவித்துக் கொள்கிறவன் என்றும்,
ஜீவ அழிப்புக்காக மட்டும் தான், வருகிறான் என்றும்,
கூறப்படுவதால், அவன் "பெருங்கை" எவர் கட்டுக்கும்,
அடங்கியதில்லை யெனவும்; அது "அதான்" அம்சமாகவே
செயல்படுவதால், எரி நக்ஷத்திரத்தை குறிப்பிட்டோம்.
ஆனால் அவனிடம், இருப்ப தெல்லாம்:- அன்பு! கருணை!
எளிமை! இனிமை! பணிவு! பொறுமை! ஆகிய
இந்த ஆறும் பொருந்தி, அவனே அந்த ஆறாகவும்!
அந்த ஆறும் அவனாகவும் இருக்கும்! —— தஷ பாபா.

**எல்லாம் ஒன்றே! அதுவாமே! அறிவீர்களோ!**

உ



ஒர் குழந்தையின் கேள்வி! ஹே பாபா!
சமீபத்தில் வரும், மடல்களிலும்,
உங்கள் வாக்கில் வரும், அனுபவ சாரம்
சங்களிலும், வரும் விளக்கமாவது :-

"மண்"! "பொன்"! "ஆவரணம்"!

இவை மூன்றும், முறையே "பரம்" என்றும்,
"ஸ்ரீ பகவான்" அதாவது திரிகர்த்தாக்கள் என்றும்,
"ஜீவாத்மாக்கள்" என்றும்; இவை மூன்றும்,
"ஒன்றே" என்றும். அதாவது மண்ணுக்கு (பரத்திற்கு)
அன்னியமில்லையென்றும். தெளிவுபட விளக்குகிறீர்
கள். அது எங்களுக்கும், தெம்புடையதாகவும்,
சிறப்புடையதாகவும், ஏற்று அப்படியே, பசுமரத்தாணி
போல், பதிந்தும் விட்டது.
இதில், எங்கள் கேள்வி என்னவென்றால்?
சில சமயம், மண்பாண்டங்களை, ஒப்பிட்டு அப்பாண்
டங்கள். அனைத்தும், "மண்ணுக்கு" அன்னிய
மில்லை, யெனச் சொல்வதையும், ஏற்றுக் கொள்கிறோம்!
ஆனால், மண்! பொன்! ஆவரணம்! என மூன்று தோன்று
கிறது. அம் மூன்றும், கிரமமாக பரம்! ஈசன்! ஜீவன்!
எனவும், விளங்குகிறது. ஆனால் மண்ணையும் / மண்பாண்டங்
களையும்! ஒப்பிடும் பொழுது, அம் மூன்றில், ஒன்றை
காணவில்லையே? அதாவது பரமும், ஜீவனும், தோன்று
கிறது. அங்கு ஈசனைக் காணவில்லையே? இது சற்று குழப்ப
மாக இருக்கிறது. இதை சற்று விளக்கினால் நலமாக இருக்குமே?



உ

(௫௨)

வைத்தியம்:— நல்லபையனா கேள்வியே, சற்று கூர்ந்து கவனிக்கவும்:—

மண்பாண்டமும்! பொன் ஆபரணமும்! "மண்ணுக்கு" அன்னியமில்லை, என்பதை, ஒப்புக்கொள்கிறாயா?

குழந்தை:— ஒப்புக்கொள்கிறேன் பாபா!

வைத்தியம்:— சமுத்திர கரை மண்ணிலும், ஆற்று மண்ணிலும், பாத்திரம் செய்ய முடியுமா? பொன் எடுக்க முடியுமா?

குழந்தை:— முடியாதுதான்!

வைத்தியம்:— அப்படியானால்? பொன் எடுக்க ஒரு மண்! பாத்திரம் செய்ய ஓர் மண்! என்பதை ஒப்புக்கொள்கிறாயா?

குழந்தை:— அதையும் ஒப்புக்கொள்கிறேன்!

வைத்தியம்:— மண்பாண்டம் செய்ய களி (பசை) மண் தேவை! பொன் எடுக்க, பொன் "சத்துள்ள" மண் தேவை! இது அனைவரும் அறிந்ததே! இதைகவனி. களிமண்ணோ? பொன்சத்துள்ள மண்ணோ? கிடைத்துவிட்டால் பாண்டமும், பொன்னும், வந்துவிடுமா?

குழந்தை:— வரமுடியாதுதான்! மண்பாண்டம் செய்ய, "ஒருமனிதன்" வேண்டும்! அதைப்போலவே, மண்ணிலிருந்து பொன்னைப் பிரித்தெடுக்கவும், "ஒரு மனிதன்" வேண்டும்!

வைத்தியம்:— நீ கூறிய, இவ்விரு மனிதர்களுமே, ஸ்ரீபகவான் என்ற "ஈசன்" ஆகும். மண்ணும், பொன்னும் ஈசன் ஆகாது. அவைகளுக்கு "நாமரூபம்" கொடுப்பவனே, ஈசன் ஆவான்! இவ்விருவரை, குயவர் என்றும். ஒருவரை கன்னார் என்றும், அழைக்கலாம்!



உ



மண்ணும், மண்பாண்டமும், முறையே "ஈசன்" என்றும், "ஜீவன்" என்றும், அனுபவ ஞானிகள் கூறுவர். இது "பக்தி" மார்க்கமாகும்!

மண்ணும், பொன்னும், ஆவரணமும், முறையே, "பரம்" என்றும், "ஈசன்" என்றும், "ஜீவன்" என்றும், அனுபவ ஞானிகள் கூறுவர். இது "ஞான" மார்க்கமாகும்!

அந்த பக்தி மார்க்கத்தில், உள்ள மண்ணுக்கும், அதன் பாண்டத்திற்கும், ஓர் அன்பர் பாடுகிறார்?

ஊற்றக் குழியிலே மண்ணை எடுத்து,
உதிரப் புனலிலே உண்டை சேர்த்து,
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்,
வரை ஓட்டுக்கும் ஆகாது என பாடுகிறார்!
அவரே இன்னொரு இடத்தில் பாடும் போது,
இருவர் மண் சேர்த்திட ஒருவர் பண்ண,
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை,
ஈசன் நிலை அறியார்க்கு இந்த சூளை,
எறி மண்ணுக்கு, இரை ஆகும் என்று உணர்! எனப் பாடுகிறார்.

இவ் இரண்டில், முதல் பாடலில், உவர் மண்ணும் (உப்பு மண்ணும்) உதிரத்தை பிசைந்தெடுத்த பாண்டமானது, ஈசன் என்ற குயவனார் செய்ததாகும். இது உடைந்தால் (இறந்தால்) வரையோட்டிற்கும் (எம்பார யோஜனைக்கும்) ஆகாது என்கிறார்.



உ (54)

இரண்டாவது பாடலில், இத்தாலம் என்ற, இருவினை மாண்டத்தை, இருவர் (ஆண் பெண்) ஆரம்பிக்கின்றனர். ஒருவரே (பெண்ணே) அதை உண்டாக்குகிறாள். ஆனால் இந்த பாண்டம், இப்பூமிக்கு வந்ததை, ஈசனை அறிந்து, உணர்ந்து, அவனை சேர்வதற்கே, அந்த காரணம். ஈசனை அறியாமல், அவனை சேராமல், சொந்த, பந்த பாசத்தில், உழன்று, அலைந்தால் திரும்ப திரும்ப ஜனனமரண சுழலில் சுழல வேண்டுமென, அறிவுறுத்துகிறார்.

ஆகவே குழந்தாய்! உன் கேள்வியின் விடையென்ன வென்றால்?

"மண் & மண்பாண்டம்"!

இவ்விரண்டும், பக்தி மார்க்கம் ஆகும்!

"மண்"! "பொன்"! "ஆவரணம்"!

ஆகிய இம் மூன்றும், ஞான அம்சமாகும்!

ஆனால் இவ்விரண்டும், உண்டு பண்ண "இருவர்" வேண்டும்! ஒருவர் குயவனார்! ஒருவர் கன்னார்!

இவ்விரு தொழில் "இரண்டாக" இருந்தாலும். செய்யும் நிலையில் (சிருஷ்டியில்) "ஒருவரே"!

இதில் குயவராமவர், வெறுமனே மண் இருந்தால் "மட்டும், மண்பாண்டம் செய்ய இயலாது. இவருக்கு, "உபகரணமாக" (உபகாரியாக)





"ஜலம்" வேண்டும்! ஜலம் இல்லாமல், அம்மண்ணை பிசைந்து, தனி (பசை) ஆக்காமல் பாண்டம் உருவாகாது. அச் ஜலமே "மாயா" ஆகும். இவர் மாயா இல்லாமல், செயல்பட முடியாது. அதைப்போலவே, இரண்டாமவராகிய, தனையும் பொன்னை, ஆவரணம் ஆக்க வேண்டுமானால். அப் பொன்னை தனியாக, ஆவரணம் செய்ய முடியாது. அப்பொன்னை, ஆவரணம் ஆக்குவதற்கு, அவருக்கு "களிம்பு" (பசை) தேவை! களிம்பு இல்லாமல், ஆவரணம் செய்ய முடியாது. இங்கு அக்களிம்பே, "மாயா" ஆகும்!

அந்த ஜலமும்! இந்த களிம்பும்! ஒன்றுடன் ஒன்று ஒட்டி, "பிணைந்து இணைவதாகும்! இப்படி செய்யப்பட்ட பாண்டமும், ஆவரணமும், எப்படி பிரிக்க முடியும்? எப்படி விலக்க முடியும்? எப்படி மாற்ற முடியும்? எப்படி மறக்க முடியும்? அதுவே சொந்தக்கால் பந்தமும்! பந்தக்கால் பாசமும்! பாசக்கால் உறவு சுற்றம், நட்பும்! அவைகளின் இன்பமால், புண்ணியபாவ வினைகளும்! அவைகளால், ஜனன மரண பருவழியும், எப்போதும் தடுக்கின்றன! ஆனால் அவைகள், உங்களுக்கு இல்லவே இல்லை! நீங்கள் அனைவரும், ஜீவன் முக்தர்களே! இது ஸத்யம்! எல்லாம் ஒன்றே. அதுவே! அதுவாமே! அறிந்தவர்களே! இது ஸத்யம்!

பாபா.



உ



ஓர் குழந்தை! ஹேபாபா! பாபா!
உங்களுடைய, அத்வைத பாடமே,
**எல்லாம் ஒன்றே** என்றும்,
**அதுவே நாம்! நாமே அது!**
என, சொல்லும், போதும், அதைக் கேட்கும்
போதும், ரொம்ப ரொம்ப, ஆனந்தமா இருக்கு!
திரும்ப திரும்ப, சொல்லணும்; திரும்ப திரும்ப,
கேக்கணும் போல இருக்கு! **ஆனா அது
என்னென்னு தான்** புரியலே!
நாமே ஜீவன் இல்லேங்கறேள்! நாமே ஸ்ரீ பகவான்
இல்லேங்கறேள்! பின்ன நா யாரு?
**நாமரூபமும்** நாமை இல்லேங்கறேள்.
**நாம் ஆத்மான்னும், நாமே பரம்னும்** சொல்றேள்! நாமை,
ஒருதரமாவது, அதை காணணும்! இல்லே ஒணர
ணும்! அதுவுமில்லே இதுவுமில்லே! நீங்க சொல்
றேள்! நாங்க தலையை ஆட்றோம். கொஞ்சம் எங்க
சிற்றறிவுக்கு, எட்டுறப்பிலே சொன்னா தேவலே!
ஆனா ஒண்ணு, நீங்க ஸத்தியம் பேசறேள். அதை
நாங்க, நம்பறோம். கண்டிப்பா, நாங்க எல்லோ
ரும், **ஜீவன் முக்தர்களே!**
ஒங்கள நம்பறவா யாரும் கெட்டுப் போகமாட்டா!!!
இது ஸத்தியம்! ஆமை நாசமாப் போவும்!



வைத்தியம் :- ஓம் மழலைச் செல்வமே!
உன் மழலை மொழி, எம்மை அப்படியே,
உருக்கி விட்டது. அதிலும் ஒன்றும்
புரியவில்லை யென்றும்; புரியாவிட்
டாலும், நாங்கள் இவன் முக்தர்களே!

என, உறுதியாக நம்பி விட்டாயல்லவா,
அந்த ஒன்றே போதும். உன் "நம்பிக்கை
யே யாமாகும்"! "யாமே நீ
ஆகும்"! நமக்கு அன்னியம், எதுவும் இல்லை
யென்பதே, ஸத்தியமாகும். நீயோ "அறியா
பருவம்"! யாமோ அறிவின் சொரூபம்!
உன் நிலைக்குத்தக்க படி, சுருக்கமாக உரைக்கிறோம்.
உன் கேள்வியின் "ஆர்வம்"! அதன்மீது நீ கொண்
டுள்ள, "நம்பிக்கை" உன்னை கடைத்தேற்றுவ
தாகும்!
"அத்வைதத்தின் ரகஸ்யம்"!

X—X—X—X—X—X

ஓம் செல்வமழலையே! அத்வைதம் என்றுவே,
"ஒன்று"! அது ஆனந்தமே! அதை விளக்க
அங்கு "மற்றொன்று" இல்லவேயில்லை!
நீயும் எம் நிலைக்கு வந்துவிட்டால், கேள்வி கேட்கும்
நீயும் இருக்கமாட்டாய். எப்படி ஓர் உப்புப் பதுமையாக
நீ இருந்து கொண்டு, சமுத்திரமாகிய எம்மைக்கண்டு, கேள்வி
மேல் கேள்வி, கேட்டுக்கொண்டே இருந்தால், சமுத்திரம்
பேசுமோ? ஆனந்தமாக உன்னைக்காணும் ஆனால் பேசாது.

உ



நீ நாமரூபம் தாங்கியிருக்கிறாய். ஆகவே பேசுகிறாய். எம்மால் உனக்கு விளக்கம் சொல்லவும் தெரியாது. விளக்கம் சொல்லவும் முடியாது. ஏன் என்றால் "யாம் ஒரே பிரவாகம்! யாம் ஒரே நீர்பரப்பு"!

ஆனால் நீயும் யாமும் ஒன்றே! எம்மாயாவின் சக்தியால், உனக்கு ஓர் "நாம ரூபத்தை" கொடுத்து, சில விளையாட்டு பொருள்களையும் கொடுத்து, அவைகளை பற்றிப்பிடித்து சிலகாலம் விளையாட வந்து "மனதையும்" கொடுத்தோம்.

ஆரம்பத்தில், மனதை உன் வசம் வைத்துத்தான் விளையாடினாய். இப்போது அந்த மனம், உன்னை வைத்து ஆட்டி ஆட்டமுண்டு ஆட்டுகிறது. நீ விளையாடும் போது, விளையாட்டு வினையம் இல்லாமல் இருந்தது. இப்போது அம்மனம், உன்னை வைத்து ஆட்டும் போது வினையமாய் "(நான்/எனது)" என மாறி உன்னை ஆட்டுகிறது.

ஹே குழந்தே! எம்மை பார்த்து நீ யார் எனக் கேட்கிறாயே! உன் நாமரூபம் அழிந்தால்தானே, நீயும் எம் அம்சம் பெறமுடியும்? உன் விளையாட்டின், "மோகத்தால்" எம்மை, அடியோடு மறந்து விட்டாயே இது என்ன நியாயம்? விளையாட என சில பொருள்களை கொடுத்தால், உடைமையும், உரிமையும் கொண்டாடி, ஆதிக்கமும் அதிகாரமும் அகங்காரமும் கொண்டு, "காரசாரமாக" விளையாடிக் கொண்டு, அப்பொருள்களையே பார்க்கிறாய்! அப்பொருள்களையே காணுமே எனத் தேடுகிறாய். அப்பொருள் வேணுமென்று அடம் பண்ணுகிறாய்! அப்பொருள் உடைந்தாலோ (மரித்தாலோ) காணாமல் போனாலோ,



உ



(ஏற்றென்றும் மாறாதவோ) ஐயோ முறையோ, என கத்தி பரிதவிக்கிறாய். அப்பொருள், உனக்காக, விளையாடக் கொடுத்த எம்மை, "ஒருகணமாவது" எண்ணிப் பார்க்கிறாயா? "உணரும்" உன் விளையாட்டின் மோகம், அப்படி எம்மை மறக்கடிக்கிறது போலும்? ஆனாலும், "யாம் உன்னை மறவோம்"! என்றாவது ஓர் நாள், எம்மை நினைப்பாய்! அழைப்பாய்! என யாம், "நம்பிக்கையோடு" உனக்காக, காத்துக்கொண்டு நிற்கிறோம்!

இதை கவனிக்கவும்!

முன் அத்தியாயத்தில், கூறியபடி, மண்ணும் பாண்டமும் பக்தி நிலை என்றோம். மற்றோர் நிலையில், பொன்னும், பொன்னும், ஆவரணமும் ஞான நிலை என்றோம். "மண்ணும்/மண்பாண்டத்தையும்!" எடுத்துக்கொள்வோம்.

மண்ணுக்கும் மண்பாண்டம், அன்னியமில்லை என்பதே சத்தியம். மண் மண்ணாகவே இருக்கும் போது, அது உபயோகம் இல்லை. அம்மண்ணே, நாமரூபம் கொண்டு, பாண்டமாக மாறும் போது, உபயோகம் ஆகிறது. மண்ணில் எந்த, குறைபாடும் இல்லை. அப்பாண்டத்தில், இது இக்கதையது. இது இன்ன பிரயோஜனம் என, குணம் கற்பிக்கப்படுகிறது. அதை நான் எனது, என விவகரிக்கும் போது, குறைபாடும் சேர்க்கப்படுகிறதென்று உணர்க.



உ

(60)

(1) பரம் எந்த இருப்புத் தன்மையையும் பெறாததாலேயே. அதற்கு, வரிவடிவமோ, வாக்கு விளக்கமோ, எவராலும் கொடுக்க முடியாத ஒன்றுமே!

(2) அது விளையாட்டின் நிமித்தம், செயல்படும் நிலைக்கு தன்மை ஆக்கிக் கொண்ட தன்மை "மனம்" ஆகும். இந்த மனதிற்கு, வாக்கிய விளக்கமாக "சதாசிவம்! மஹேஸ்வரன்" எனக் கொண்டனராம்.

(3) அந்த மனதை, பொன், வெள்ளி, (எவர்சில்வர்) இரும்பு, பித்தளை, அலுமினியம், பிளாஸ்டிக் (ரப்பர்) என பலவித விதமான "உபயோகங்கள்" ஆயின. இவைகளை வாக்கிய விளக்கமாக (இதுவரை கூறிய அனைத்தும் மனதுக்கு அந்நியமில்லை) "தீர்காத்தாக்கள்!" என வைத்துக் கொண்டனராம்.

மனதிற்கு எக்குணமும் இல்லை! அது "நிர்குணம்!" உபயோகங்களுக்கு, ஒரே குணம் உண்டு அது "சத்வகுணம்!" அதே உபயோகங்களுக்கு நிலை கண்டு மேலும் இரு குணங்கள் உண்டு அவை "ரஜஸ்/தமஸ்!"

(4) அதே உபயோகங்கள் "பாத்திரபாண்டங்கள்" (ஆவினம் உட்பட) உருவெடுத்தன! மனதின் பல்வகைமையால் இவை அனைத்தும் பலவிதமான "நாமரூபம்!" பெறுகிறது. இந்த நாமரூபங்கள் அனைத்தும், அதனதன் உபயோகத்தின் நிமித்தம், நாமரூபமும்! அதன் குணசெயல்களும், அமைகின்றன! இவை "கோரகுணதோஷங்கள்" என ஆகிவிடுகின்றன!





(5) 84 லட்சம் ஜீவ கோடிகளிலும், இந்த மனித இனமே, "மனம்" படைத்ததாக அமைகிறது. மற்றும் அனைத்தும், மனம் இல்லவே இல்லை. ஆறறிவு இயற்கையின் அமைப்பில், அவைகள் மனம் உள்ளதைப் போல், காணப்படும்.

இந்த மனிதனிடம் மனம் வசம், "அகப்பட்டு" கொண்டதன்மையால், இவன் மன எண்ணமானது,

"நான்":— என்றால்! அதிகாரம், ஆதிக்கம், அகங்காரம்;

"எனது":— உடைமை! உரிமை! பாத்யதை, சூடு சுரணை! லஜ்ஜை! வெட்கம்! இவைகளால், பின்னப்பட்டான்!

இந்த "பின்னலே" (சொந்தத்தால் பந்தமும்! பந்தத்தால் பாசமும்! பாசத்தால் பற்றும்! பற்றால்) புண்ணிய பாப வினைகளும், சூழப்பெற்றன!

"சத்"

செயல்படாத பரம். செயலற்றதன்மை.

பிரம்மானந்தம். ஒன்றே

"பரநிலை"!

சத்தாக இருந்தது.

"சித்"

செயல்படும் நிமித்தம் அனைத்து உடனாய் வேறாக இருக்கும்.

பேரானந்தம்.

ஸ்ரீபகவான் ராமனாகவும் அவன் ஐக்கியமாக ஆனான்!

"ஈசநிலை"!

விளையாட்டின் நிமித்தம், சத்தே சித்தாக, வடிவெடுத்து, அதுவே வினையாகி மனம்புகுந்து சித்தம், என ஆனது!

"ஆனந்தம்"

செயல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து பாத்திர பாண்டமும்! விஷயானந்தம். இன்ப துன்பமும். கோபதாபம் ஜனனமரணம் வித்து.

"ஜீவநிலை"!

நான் எனும்போது, அனைத்து கோரணைகளும், ஆட்பட்டு நோய் வந்த காரண காரியம் தெரியாமல் திண்டாடுகிறது!



உ



இதில் கூறிய விஷயங்களை சற்று
அறிவு ஊன்றி, விசாரித்து அறிந்தால்

# நாம் யார்????

நாம் எப்படி இருந்தோம்? நாம்
எப்படி எதனால் வந்தோம்? நம்
விளையாட்டுக்குப்படி விபரீதமான காரணகாரியம் என்ன?
நடந்ததை இனி, எண்ணிப்பார்ப்பதால், எம்பிரயோ
ஜனமாவது உண்டா? இல்லவே இல்லையே? இனி
நாம் என்ன செய்ய வேண்டும்? எதை விடவேண்டும்?
எதைப் பற்ற வேண்டும்? நாம் என்ன ஆகவேண்டும்?
இப்படி கேட்டு, குட்டிச் சுவர் ஆனதற்கு காரணம் அம்மா
அப்பாவா? கணவன் மனைவியா? சொந்த பந்த உறவா?
தொழில் பணம் பாசம் பிணைப்பா? அல்லது நாம் வணங்
கும், ஸ்ரீ பகவான், இப்படி நம்மை, ஏமாற்றி, ஆக்கி
விட்டாரா? என கருத்து ஊன்றி, ஆராய்ந்தால், இதற்கு
**"எல்லாம்"** பொறுப்பல்ல! நம் மாயா **மனமே**
பொறுப்பாகும் என தெளிவாகும். இதற்கு ஒரே வழி!!!

## "நான், எனதை நீக்கு!"

எல்லாம் நீயே! எல்லாம் உனதே! என **"ஆக்கு"!!**
இதனால் ஜீவபந்தம் என்னும் வினைத்தளைகள் பஸ்பமாகும்:
அந்நிலையில் நீ **ஸ்ரீபகவானே!** என ஆக முடியும்.

ஸ்ரீ பகவானின் ஆதி விதையே என்றும், ஸ்ரீ பகவத்
சொரூபமோ! அவன் மாயம் மனதை முத்தொழில்
கர்த்தத்துவமோ! அவன் கற்பனையான, லோகாந்திர
பிராப்தியான, **"பந்த முக்தியோ"** வென்று
விடுவாய், என்றே வேதாந்தத்தில் பெறுவாயென்றே சொல்லவில்லை



உ

௬

ஸ்ரீமத்பகவான் நிலையை நீ பெறும் போது, உன்னிடம், எந்த "கோர குண தோஷங்களும்" அவஸ்யம் இருக்காது! இருக்க முடியாது! அங்கு "ஏக" ருமைமாகிய "ஸத்வம்" ஒன்றே இருக்க முடியும்!

அன்பு, பொறுமை, பணிவு, கனிவு, நம்பிக்கை, வைராக்கியம், உன் லட்சியத்தில் உறுதி இவைகள் தான் இருக்கும், இவையே ஸ்ரீபகவத் சொரூப லக்ஷணம்.

அந்நிலையில் இந்த நாமரூப உலகை காணும் போது, சலனம் சஞ்சலம் அற்ற நிலையில், "எல்லாம் நம்முடையதே" என தோன்றும்! அங்கு இயல்பாகவே "மனம் மறைந்தா ண" தன்மையினால், அம்மனம், ஜீவ பந்தமும், தெய்வ பந்தமும், ஒழிந்த நிலையில், "எல்லாம் ஒன்றே! அது பிரம்மானந்த சுகசொரூபமே! "அது நாமே! நாமே அது!!" என்ற சுத்த அத்வைத நிலைமையாகிவிடும்! நிலைமையாகிவிடும், என்று சொல்வதைவிட "எம் மழலையே! நீ அது ஆகிவிட்டாய்" என இவ்விதமாய் முடிக்கிறேன்!

பாபா.

உ

(64)



வைத்தியம் :- இப்போ சொல் கொழந்தே!
இப்போ நீ அதை காணணுமா? இல்லே
வொணரணுமா?

குழந்தை :- அன்பே உருவமையமா!
யாம் எதைக் காணணும்? எதை வொணரணும்?

(எமக்கு அன்னியமாய் இருந்தாலல்லவோ காணவும் உணரவும் முடியும்)

எமக்கு அன்னியமா, எவையுமே
காணத் தெரியலையே! எல்லாமே, எம் மனம்பிரந்தா
மயக்கமே என, தோணும் போது, நேக்கு ஒண்ணும்
சொல்லத் தோணலை! எம்முடைய மனம் படுத்தும்
பாடு, இப்பத்தான் தெரியறது! நேக்கு தெரிந்ததெல்லாம்
"நான், எனது" போறும் போறும். போறும்
போறும்னு ஏன் சொல்லணும்? போயிருத்து!
"எல்லாம் நீயே!" "எல்லாம் உனதே!" என "ஆயிருத்து!"
யாம் பகவானும் இல்லே! பகவத் சொரூபமும் இல்லே!
யாம் "மாயை" இல்லாப் பகவான்!!
இப்போ எம்மை யாரும் காண முடியாது. உணரவும் முடியாது.
எம்மை காட்டும் "மாயா" என்றுமிலக் கண்ணடியும்,
நொருங்கி நாசமாய் போச்சு. அங்கே நாம் அது!
அது நாம்! எனச் சொல்ல வேற! உணர வேற! காண வேற!
"ஒண்ணுமில்லையே!"
ஹே பாபா! நீங்க எங்கே இருக்கேள்? எங்கே கில்லே? வொங்களையும் காணோம்.
யாரையுமே காணோமே! சொல்லறது யார்? கேக்கறது யார்?
சித்தம் அத்தம் அத்தம்! சுகம் சுகம் சுகம்! ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்!
ப ரி பூ ர ண மா யி ட்டோம்! இதுவே பரத்தின் சிறப்பு

உ





ஓர் குழந்தையின் கேள்வி:— மண்ணும் பொன்னும்!

மண்ணாக இருக்கும் போது, பாண்டங்கள் அங்கு இல்லை யென்பதே உண்மை!
பொன்னாக இருக்கும் போது, ஆபரணங்கள் அங்கு இல்லை யென்பதும் உண்மையே!
மண்ணே, பாண்டங்களாக மாறுகிறது!
பொன்னே, ஆபரணங்களாக மாறுகிறது!
பாண்டம் ஆபரணம் என்ற "நாமரூபம் வேண்டாம்" என்றும், "மண்ணும் பொன்னும்" வேண்டும் என்றும் தான், இது காலபரியந்தம், பாடம் நடத்தி வருகிறீர்கள்.
பாண்டமும் ஆபரணமும், ஓர் "ரூபம்" தாங்குகிறது, என்பதும் உண்மையே! ஆனாலும்?
மண்ணும் பொன்னும், ரூபம் தாங்கவில்லை யானாலும், மண்ணையும் பொன்னையும், நம் "கண்களால்" காண்கிறோம். ஆனால் அவ்விரண்டும், "மண்" என்றும், "பொன்" என்றும், ஓர் "நாமம்" தாங்கத்தானே செய்கிறது.
இங்கு பாண்டம் ஆபரணம், என்ற "நாமரூபத்திற்கும்!" மண் பொன் என்ற "நாமத்திற்கும்!" என்ன வித்தியாசம் இருக்கிறது?
பாண்டத்திற்கும், ஆபரணத்திற்கும் "விதவிதமான" நாமம் கொடுக்கிறோம், அவ்வளவுதானே?
நம்முடைய, ஆத்ம ஞானபாட்டிற்கு, இதிலிருந்து என்ன முக்கியத்துவம் இருக்கிறது, என்பதை சற்று விளக்கிடல் தேவை?



உ

ஓர் ஏழை வைத்தியம் – ஒரு செல்வமே

இது நல்ல கேள்விதான்! கவனமாகக் கேள்!
"பர" சொரூபத்திற்கோ, இயக்கம் இருப்பும்
இல்லையென்பதே, சத்தியம்! ஆனால் அதன்
அம்ச ஸ்வரூபனான "ஸ்ரீபகவானுக்கோ" இருப்பும் உண்டு! இயக்கமும் உண்டு!
என்பதே சத்தியம்! ஸ்ரீ பகவானின் அம்ச ஸ்வரூபனான,
"ஜீவனுக்கோ" (மனிதனுக்கு) இருப்பும் உண்டு! இயக்கமும்
உண்டு! குணதோஷ, புண்ணிய பாப கர்மாவும் உண்டு!

"மண்"! "பொன்"! இவ்விரண்டுக்குமே, ரூபமில்லாத
"நாமத்தை" மட்டுமே, உடைய இருப்பு மட்டுமே
உண்டு. ஸ்ரீ பகவானுக்குமே ஏக குணம்! மண் பொன்னுக்குமே
நாமத்தை மட்டுமே, இருப்புத்தன்மையாக கொண்ட, "ஏக
குணம்" மட்டுமே உண்டு.

ஆனால் பாண்டத்திற்குமே, ஆபரணத்திற்குமே, "நாம
ரூபம்" என இரண்டுமே உண்டு! ஆனால் இன்னொன்றுமே,
இவைகளுக்கு உண்டு! அது அவைகளின் "இயக்கம்"
ஆகும். இது இந்த மனம் படைத்த, மனிதன்
மட்டுமே, "மனோமயக்க போதை"யினால்
தன் சுய தேவைக்கென் பந்தின்றி மிக்கும், கொடுக்கலாமே!

ஒவ்வொரு நாமரூபத்திற்குமே, அதனதன் இயக்க
செயல் முறையே, "குணமாக" கற்பனையால் கொடுத்தான்!



உ 

மண்ணாகவோ, பொன்னாகவோ, அவைகள் இருக்கும் போது, ஏகருணமாயும், அது எவரையும், பாதிக்காமலும் இருந்தது! அவைகள் பாண்டங்களாகவும், ஆபரணங்களாகவும், மாறியவுடன், விதவிதமான "**குணங்கள்**" கற்பிக்கப்பட்டு விட்டன! இந்த மனம் படைத்த மனிதன், அவைகளை "**நான்**", "**எனது**"! என உடைமையும், உரிமையும், கொண்டாடி, விவகரிக்கும் போது, அவைகளின் குணங்கள் "**தோஷம்**" உள்ளவைகளாக, மாறி விட்டன!

மேலே கூறியபடி இவைகள் "**நாமரூபம்**"! தோற்றம் உண்டானதால்தானே, விகாரம் அடைந்து, விவகாரத்திற்கு (பிரச்சனைக்கு) உரியதாகின்றன? மேலும் குண தோஷங்களும், அவைகளால் புண்ணிய பாப வினைகளும், சேர்ந்து விட்டன!

மேலே கூறிய இவைகள், நாமரூபம் பெறுமுன் "**ஏக நாமாவோடு**" இருந்தால், (**ஸ்ரீ பகவன் நாம ரூபமாக**) விகாரமோ, விவகாரமோ, குண தோஷங்களோ, புண்ணிய பாபங்களோ, பரம்பரை இல்லையல்லவா?

மேலும் இந்த மண்ணையும், பொன்னையும், எந்த குண தோஷங்களும், எந்த இயக்கத்திற்கும், பயன்படுத்தவும் முடியாது. அவைகள் பயன்படவும் செய்யாது! அவைகளின் மேல், குற்றம் குறையோ; பேதங்களோ; விருப்பு வெறுப்போ; வரவியலாதன்மையால், ஏக குணமாகிய, அதையும் தாண்டி, நிர்க்குண பிரம்மத்திற்கு, சென்று விடலாமே?



உ



மேலும் இந்த மண்ணும் பொன்னும், "நாமாகவே" எந்த நாமரூபமும், தாங்களில்லை. தாங்க முடியாது. இவைகள் நாமரூபம் தாங்குவதற்கு, காரணம் இந்த "மாயா மனமே"!

காரணம் இந்த மனமானது, "மனிதவடிவத்தில்" புகுந்து கொண்டு, பாத்திர பாண்டங்களையும், ஆவரணங்களையும், வைத்து நான் எனது, என விளையாடிக் கொண்டிருப்பது தெரிகிறது!

மண்ணுக்கும், பொன்னுக்கும் இருப்புத்தன்மை இருந்தாலும், இயக்கத்தன்மை, இல்லாத்தன்மையால், எந்த "குணமும்" வரப்பாதையும் இல்லை. அங்கு சொந்தம் கொண்டாடும், மனிதனுக்கும், அவைகளின் இயக்கமோ, அவைகளின் குணங்களோ இல்லாமலிருந்தால், அவனும் இயக்கமற்ற, குணங்களற்ற, தர்மா இல்லாததுவகவே ஆகிவிடுவான்.

பாத்திர பாண்டம் என்றும், ஆவரணங்கள் என்றும், "நாமரூபம்" பெறும்போது, மனம் கெட்டு குணதோஷங்களுக்கு, ஆளாகி, வினைகளைப் பெருக்கிக் கொள்கிறது!

மண் என்றும், பொன் என்றும், ஓர் "நாமம்" மட்டும் பெறுவதால் மனம் கெடாமல் மனதோக்கவும் முடியும். குணதோஷங்களோ, வினைப் பெருக்கங்களோ இல்லாமலிருக்கவும் முடியும்! மனதின் தோற்றம், வாஸனையாகும்! வாசனை என்பது, குணம் ஆகும். மண் பொன்னை, ஒன்றாக இருப்பதால், மனதிற்கு வாஸனை ஏதுவதில்லை. அவைகளே பாத்திர பாண்டங்களாகவும், ஆவரணங்களாகவும், மாறும் போது "தேவையும் ஆசையும்" ஒன்றுடன் ஒன்று பின்னி வாஸனையும் (குணம்)



உ



குணதோஷங்கள், விரிவடைகின்றன!
ஓர் முக்கியம் என்னவென்றால்?
ஓர் உதாரணத்திற்கு:- "மண்"
என்றால் "யோகமாயாவை"
சொல்லலாம்! "பொன்" என்றால்,
"யோகமாயாவை" சொல்லலாம்!
"மணம்" என்றால், யோகமாயாவின் குழந்தை
ஆகும்! மேலே சொல்லிய, மண்ணையும் பொன்னையும்
வைத்து விளையாடுவதற்காகவே, நம் "கற்பனை"
வடிவில், பார்க்கிற பாண்டங்களாகவும், ஆபரணங்க
ளாகவும், "பற்பல நாமரூபங்கள்"
கொடுத்து அவைகளுக்கு அழகு, வசீகரம், கவர்ச்சி,
இவைகளை, கொடுப்பதற்காகவே நம் தாயான
யோகமாயாவின், அங்கமாக "விஷ்ணு
மாயாவை" தோன்றச் செய்து, வெகு திறம்பட
இந்த "மனமே" விளையாடிக் கொண்டிருக்கிறது.
இச் ஜகஜீவ விளையாட்டே, மனதுடையதாகும்.
அம்மனதை அதன் அம்மாவிடம் விடுவதே சாதனை!
மனதை விடுவது என்றால், எதையும் "பொறுமை
யாக" எல்லாம் நலமே! தீமை இல்லவே இல்லை!
எல்லாம் நீயே! எல்லாம் உனதே! என அம்மா
இருப்பதுவே, அம்மனதை அதன் அம்மாவிடம், விடும்
நியமாகும்! ஏன்? எப்படி முடியும்? எதற்காக இப்படி
நடக்கிறது என, கேள்வி கேட்டால், குணதோஷங்கள்
நீயே வலிய, உண்டாக்கிக் கொண்டிருக்கிறாய், எனப் பொருள் படும்!

உ





மண்ணிலும், பொன்னிலும் "யாம்"
"அதுவாக" இருக்கிறோம்
என்ற "ஏக" குணம்
ஒன்றே இருக்கிறது! ஆனால்
பாத்திர பாண்டங்களிலும், ஆபர
ணங்களிலும், "எங்கள்
பலபல" விதங்களாக அனுபவிக்கலாம் என்ற
குண பேதங்கள் இழுக்கிறது! பாத்திர பாண்ட, ஆபரணங்களின்

"நாமம் மிரட்டுகிறது!"
"ரூபம் மயக்குகிறது!!"

நாமம் :— என்னை விட்டால் உனக்கு வேறு கதியில்லை!
யென மிரட்டுகிறது!

ரூபம் :— என்னை பல பல விதங்களிலும், அனுபவிக்கலாமே
"வாவா" என மயக்குகிறது!!

இந்த மிரட்டலும், மயக்குதலும், "ஜட" சொரூபமாகிய,
பாத்திர பாண்டங்களும், ஆபரணங்களும் செய்யவில்லை!
இந்த "மாயாமனமே!" அவ்வாறு செய்கிறது.

காரணம் :— அப்படி செய்தால்தானே, புண்ணிய பாபம்
சேரும்! ஜனன மரணம் ஆழ்த்தும்! உலக சூழ்ச்சி
நடைபெறும்! இவை அனைத்திற்கும் காரணம் "மாயா"
வும்! அதன் குழந்தை "மனமும்"! ஆகும். அதாவது
மயக்குவது "மாயா"! மயங்கி ஆடுவது "மனம்"
எனப்பொருள் கொள்ளலாம்! இங்கு மனம் ஆடவில்லை
யானால், மாயாவுக்கு வேலையில்லை!



உ

மனம் ஆடாமல் இருப்பதற்கு,
மாயாவின் அதிபதியாகிய, ஸ்ரீபகவானை
தாரணம் - எனக் கொள்ளலாம்!
ஒன்று என்றால்! ஸ்ரீபகவான் "ஏக" குணம்
உடையவன்! அவன் நமக்கு "நீர்" க்குண
நிலையில், அனுபவம் பெறுவதற்கு, மிகவும் உபகாரியாக
இருப்பான்! எப்படி என்றால்! ஸ்ரீபகவான் இவ்வுலக
நாடக மேடையில், "விளையாட விருப்பம்"
இல்லாதவர்களை, "பர" நிலைக்கு செல்லவும் வழி காட்டவும்
செய்வான்; செய்ய முடியும்! குருவாய் [illegible]! தெய்வ காட்டுவோன்!
இந்த நாடக மேடையில், விளையாட விருப்பம் உள்ளவர்
களுக்கு "போக போக்கியங்களை" கொடுத்து, விளையாட
வைத்து வேடிக்கையாக ரசிக்கவும் செய்வான்!
"விளையாட்டுக்கு" ஸ்ரீபகவான் பொறுப்பல்ல!
"குழந்தை" களுக்கு (நமக்கு) ஸ்ரீபகவானே பொறுப்பு!
"யத் பாவம் தத் பவதி" என்பது இங்கு
நமக்கே பொருந்தும்! உன் "மனோபலத்தை"
நமக்கே சமர்ப்பணம் செய்திடுகையில்,
"நான்" ஆக எண்ணுகிறாயோ, "நீ அது" ஆவாய்!
என்பதே, ஸ்ரீபகவான் வாக்காகும்! உன் விளையாட்டுக்கு,
ஸ்ரீபகவான் பொறுப்பல்ல! அது உன் மனதின் பொறுப்பாகும்!
நாமரூப ஜகத், பொருள் அனைத்தும் வினைப் பொருளல்ல!
அவை விளையாட்டுப் பொருள்களாகும்! நான் எனது
என்பதே வினை! நீ உனது என்பதே விளையாட்டு!
உணர்ந்து நடக்கவும்!

உ



# "மாயா மனம்"

"மாயா" என்றால், "இல்லாதது" இருப்புடையதாக காட்டுவதாகும்!

"மனம்" என்றால், "ஒன்று மற்றொன்றாய்" மாறியிருக்கிறது என, உணராமல் "எதிர்பார்ப்பால்" எண்ணி எண்ணி! "ஏமாற்றி, தடுமாறி"! சோக, மோஹ, சந்தேக, கலக்க, பயத்தில் வீழ்வதாகும்!

உதாரணம்:- கட்டையில் கள்வன் வந்தானா? இல்லையே! ஆனால் வந்தானே! கயிற்றில் சர்ப்பம் வந்ததா? இல்லையே! ஆனால் வந்ததே! சிப்பியில் வெள்ளி வந்ததா? இல்லையே! ஆனால் வந்ததே! கல்லில் நாய் வந்ததா? இல்லையே! ஆனால் வந்ததே! மரத்தில் யானை வந்ததா? இல்லையே! ஆனால் வந்ததே! கானலில் ஜலம் வந்ததா? இல்லையே! ஆனால் வந்ததே! மேலே கூறிய இவை அனைத்திலும், "ஒன்று மற்றொன்றாய்" தோற்றியது, மாயாவின் தோற்றமும்! மன தடுமாற்றத்தால் வந்த ஏமாற்றமும் ஆகும்! இத்தடுமாற்றம், இம்மனதிற்கு, ஏன் வந்தது என கவனித்தால் "பலன்" கருதும் நிலை என்ற, "எதிர்பார்ப்பால்" வந்ததாகும், என தெரிவாகிறது! இதன் காரணம், எல்லாம் ஸ்ரீ பகவான் செயல் என்ற, சர்வார்ப்பணமும், "பொறுமையும்" இல்லாததே காரணமாகும்!



உ

(73)

இன்னொரு உதாரணம்!

என்னுடைய, அழகான மனைவி, போய் விட்டாளே என்றும்; எனக்கு உழைத்து சம்பாதிக்கும், கணவன் போய்விட்டானே என்றும்; பாசமுள்ள என் வாரிசான, குழந்தை போய்விட்டதே என்றும்; இப்படி இன்னமும், அனேக "உறவை" சொல்லி, பயம், கவலை, துக்கத்தில் ஆழ்ந்து போகிறாயே, இது உன் "மனதடுமாற்றம்" என விளங்கவில்லையா? தோன்றிய உடல்களை, புண்ணியபாப "வினை" சம்பந்தத்தால், அந்த வினையை, சரிபார்த்து முடிக்கும், "காலம்" என்ற "விதி" தேவன், ஒன்றை மற்றொன்றாய், மாற்றிவிட்டான்! அதாவது, "மண்ணில்" தோன்றிய, மாம்ஸபிண்டபொம்மை, அந்த "பொம்மை" மாறி, மண்ணாகி விட்டது. அவ்வளவுதானே! இங்கும் உன், "எதிர்பார்ப்பே" ஏமாற்றமாய், முடிந்துவிட்டது! இதைப்போல!

வீடோ! பாத்திர பண்டங்களோ! ஆபரணங்களோ! உன் "வினையின்படி" காலம் கணிக்கும், காலதேவனென்ற, "விதியின்படி" இயல்பாகவே, "மாறும்" அல்லது, "கைமாறும்" அல்லது மறையும்! இங்கும் உன், "எதிர்பார்ப்பே" ஏமாற்றமாய் மாற, அந்த தடுமாற்றத்தால், "மனமாயை"

(மறையும் என்றால் மண்ணோடு மண்ணாக மறையும்)



உ

(74)

பலபல, தோஷ குணங்களுக்கு ஆளாகி,
அந்த ஆழ்ந்த "மனோபாரத்தால்"
வினைகளை பெருக்கிக் கொண்டு, ஜனனமரண
குழியில் வீழ்ந்து, விடுகிறயே! இது உனக்கே
தேவலமாகத் தெரியவில்லையா?
"தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு!"
ஆகிய இந்த நான்கும், "நாமரூப, ஜகத்,
ஜீவ, சொந்த, பந்த, பாச, உறவு, நட்பு "தோற்றம்"
ஆகும்! முன் கூறிய நிலையின்படி, "நாமரூப"
பொருள்களோ, உறவோ அவைகள் ஏற்று வந்த "வினை"
என்றால்
முடிந்தது, அவைகள் மாற்றத்திற்கோ (கைமாறியதற்கோ) மறைவிற்கோ,
"எவரும்" (ஸ்ரீபகவானோ; நீயோ) பொறுப்பல்ல.
அவைகள் ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு வந்தன.
அக்காலம் முடிந்ததால், காலதேவனாகிய "விதி"
அதன் வேலையை திட்டமிட்டபடி, விகிதாச்சாரப்படி,
பாரபட்சம் தோஷமில்லாமல், முடித்துக் கொண்டான்.
நம்முடைய இந்த "வாடகை தாஸமும்" ஓர்
நாள் காலக்கணக்குடன், முடியத்தான் போகிறது! போனால் போகிறது.
ஆதலால் நமக்கென்ன கவலை?
நமக்கென்ன லாப நஷ்டம்?? "நாம், அதுவே!"
அந்நிலை பெறும் பரியந்தம் நாம் ஸ்ரீபகவானின் குழந்தையே!
"இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!"
என அடங்கிய நிலையில், அமைதி பெற்று ஆனந்தமாக இருப்பாயாக!
எல்லாம் ஒன்றே, எல்லாம்
நலமாகவே நடைபெறுகிறது!
அதுயாமே! அது நீங்களே! இது ஸத்தியம்!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!